திருமோகூர்

# அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயில் தல வரலாறு

அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயில்

திருமோகூர், மதுரை மாவட்டம்




அருள்மிகு சக்கரத்தாழ்வார் - அருள்மிகு நரசிம்மர், திருமோகூர்- 625 107.

திருமோகூர்

# அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயில்

# தல வரலாறு

வெளியீடு :

## அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயில்

**திருமோகூர் - 625 107.**

மதுரை வடக்கு வட்டம், மதுரை மாவட்டம்

✆ 0452 - 2423227, 0452 - 2423444

## முன்னுரை

*தாள தாமரைத் தடமணிவயல் திருமோகூர்*
*நாளுமேவி நன்கமர்ந்து நின்றசுரரைத் தகர்க்கும்*
*தோளும்நான்குடைச் சுரிகுழல் கமலக்கண் கனிவாய்*
*காளமேகத்தையன்றி மற்றொன்றிலங் கதியே*

**— நம்மாழ்வார்.**

நம் இந்து சமய வழிபாட்டில் தொன்மையும் நன்மையும் மிக்கது பெருமைக்குரிய ஆலய வழிபாடாகும். அவ்வழிபாட்டில் சிறந்த ஒன்று வைணவ வழிபாடு ஆகும். அதிலும் திவ்யஸூரிகளான ஆழ்வார்களால் திவ்யப் பிரபந்தங்களில் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்கள் 108–ல் பாண்டி பதினெட்டு என்று கொண்டாடப்படும் ஆலயங்களில் திருமோகூர் என்ற இத்தலத்தின் வழிபாடு ஏற்றம் மிகுந்ததாகும். இவ்வாலயம் மதுரைக்கு வட கிழக்கே பத்து கி.மீ. தூரத்தில் மாணிக்கவாசகர் உதித்தருளிய திருவாதவூருக்குச் செல்லும் சாலையில் அமைந்திருக்கிறது.

இவ்வாலயம் வானளவிய கோபுரம், வண்ணமிகு விமானங்கள் சீராருஞ் சோலையுடன் பிராகாரங்கள், தாள தாமரைத் தடாகங்கள், பசுமையான வயல்கள் சூழ்ந்த எழிலுடன் திகழ்கிறது. இத் திருக்கோயில் மோகன க்ஷேத்திரமாக, மூர்த்தி, தலம், தீர்த்தங்களால் சிறப்புப் பெற்று அருள்மிகு மோகனவல்லி உடனுறை காளமேகப் பெருமாளும், அருள்மிகு சக்கரத்தாழ்வாரும் அருள்மிகு பள்ளிகொண்ட பெருமாளும் அருள்பாலித்து வரும் பெருமையுடையதாகும். மேலும் இப் பெருமாளை நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் மற்றும் மணவாளமாமுனிகள் மங்களாசாசனம் செய்துள்ள பெருமையும் உண்டு.

பாண்டியர், சோழர், நாயக்கர், மருதிருவர் ஆகியோரால் புதுப்பிக்கப்பட்ட விபரத்திற்கு கல்வெட்டுகள் சான்றாக உள்ளன. சங்க இலக்கியங்களிலும் தாலமியின் குறிப்புகளிலும் திருமோகூரின் தொன்மை தெரிய வருகிறது.

மதுரை பேராசிரியர் திரு.சொ.சொ.மீ.சுந்தரம் அவர்களின் பெருமுயற்சியால் இலக்கியங்கள், புராணங்கள் ஆராயப்பட்டு அனைவரும் புரிந்து, தெரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் இத்தல வரலாற்றின் முதல் பகுதியும், தொல்லியல் துறையிலுள்ள டாக்டர் வெ.வேதாசலம் அவர்களின் பெருமுயற்சியால் கோவிலிலுள்ள கல்வெட்டுகள் படித்து, வரலாற்று நூல்கள் ஆராயப்பட்டு, நிழற்படங்கள் எடுக்கப்பட்டு இத்தல வரலாற்றின் இரண்டாம் பகுதியும் சேர்ந்து ஒரே நூலாக தற்போது தங்கள் கைகளில் தவழ்கிறது.

இந்தத் தலவரலாறு சிறப்பாக அமையப் பெருமுயற்சிகள் எடுத்துக் கொண்டு எழுதிக் கொடுத்த பேராசிரியர் திரு.சொ.சொ.மீ.சுந்தரம் அவர்களுக்கும் பலமுறை திருத்தங்கள் செய்து நூல் செழுமையுற உதவிய டாக்டர் வெ. வேதாசலம் அவர்களுக்கும் உரிய கருத்துரைகள் மற்றும் திருத்தங்கள் வழங்கிய டாக்டர் இரா.அரங்கராஜன் அவர்களுக்கும் திருக்கோவில் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலவரலாறு, தலபுராணம் இரண்டும் சம்பந்தப்பட்ட துறை வல்லுநர் ஒத்துழைப்புடன் தனித்தனியே வெளியிடப்படுகிறது. இத்தல வரலாற்றை அனைவரும் படித்து அறிந்து பயன் அடைய வேண்டுகிறோம். இந்நூல் தவிர திருமோகூர் திருத்தலத்தின் தலபுராணமும் தனி நூலாக வெளியிடப்படுகிறது. அதனையும் வாங்கி அன்பர்கள் பயனடையுமாறு வேண்டுகிறோம்.

## பகுதி : ஒன்று

# அருள்மிகு காளமேகப் பெருமாள் திருக்கோவில்

பேராசிரியர் சொ.சொ.மீ.சுந்தரம், மதுரை.

திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழத் திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமாள், நம்மை உடையவன் நாராயணன் நம்பி, மண் உய்ய மண்ணுலகில் மனிசருய்ய, நூற்றெட்டுத் திருத்தலங்களில் அர்ச்சாவதாரம் எனப்படும் உருவத் திருமேனி கொண்டு, நின்ற கோலத்திலும் இருந்த கோலத்திலும் கிடந்த கோலத்திலும் காட்சி தருகிறான். திருமோகூர் உட்பட நின்ற திருக்கோலத்தில் 60 திருத்தலங்களிலும் அமர்ந்த திருக்கோலத்தில் 21 திருத்தலங்களிலும் கிடந்த திருக்கோலத்தில் 27 திருத்தலங்களிலும் எம்பெருமான் எழுந்தருளியுள்ளான். சோழநாட்டில் 40 திருத்தலங்கள், பாண்டிய நாட்டில் 18 திருத்தலங்கள், மலைநாட்டில் 13 திருத்தலங்கள் நடு நாட்டில் 2 திருத்தலங்கள், தொண்டை நாட்டில் 22 திருத்தலங்கள், வட நாட்டில் 12 திருத்தலங்கள், திருநாடாகிய பரமபதம் ஒன்று ஆக 108 திருத்தலங்களில் 106 திருத்தலங்களை வழிபட்ட சான்றோர்களை இறைவனே மற்ற இரண்டு திருத்தலங்களாகிய திருப்பாற்கடலுக்கும் பரமபதத்துக்கும் அழைத்துச் சென்று வழிபட வைக்கிறான். இவையாவும் ஆழ்வார்களால் பாடல் பெற்றுத் திவ்யதேசங்கள் என்று போற்றப் பெறுகின்றன. இத் தலங்களில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புற்ற திருத்தலமே கருணைக் கடலான காளமேகப் பெருமாள் காட்சி தந்து ஆட்கொள்ளும் திருமோகூர் என்ற திருத்தலமாகும்.

## இடம்

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் சாலையில் உள்ள ஒத்தக்கடை என்ற இடத்திலிருந்து சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில், மாணிக்கவாசகர் உதித்தருளிய திருவாதவூர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. மதுரைக்கு வடகிழக்கே சுமார் 10 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள திருமோகூர் ஆலயம் வயல்சூழ்ந்த

இடத்தில் வானளாவிய கோபுரத்துடன் வனப்புறக் காட்சியளிக்கிறது.

புராணங்களில் இந்த இடம் மோகனக்ஷேத்திரம் என்று போற்றப்படுகிறது. பிரம்மாண்ட புராணம், மாத்சிய புராணம் ஆகிய இரண்டும் இத்தலப் பெருமையை விளக்குகின்றன. திருமாலிருஞ்சோலை என்று புகழப்படும் அழகர்கோவிலுக்குத் தென்திசையில் சுமார் ஒரு யோசனை தூரத்தில் அத்திகிரி எனப்படும் யானைமலை உள்ளது. அதற்குத் தென்கிழக்கில் பிரம்ம தீர்த்தம் என்ற தடாகமுள்ளது. அதைச் சுற்றிய பகுதியை உத்துங்க வனம் என்பர். இப்பகுதியே மோகனக்ஷேத்திரம் எனப்படும் திருமோகூர் ஆகும்.

*புராண வரலாறு*

கிருத யுகத்தில் இந்திரன், துர்வாசரை மதிக்காத குற்றத்துக்காகச் சாபம் பெற்றான். அவனுடைய செல்வங்கள் பாற்கடலில் மறைந்தன. இந்திராதி தேவர்கள் வலிமையிழந்தனர். அசுரர் வலிமை அதிகரித்தது. இறவாமல் இருக்க நினைத்த தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அமுதம் பெற நினைத்தனர். தேவர்களோடு அசுரர்களும் சேர்ந்து திருப்பாற்கடலைக் கடைந்தனர். மந்தரமலை மத்தாக, வாசுகிப்பாம்பு கயிறாயிற்று. இப்படிக் கடைந்தபோது முதலில் காளகூடம் என்ற நஞ்சு வெளிப்பட்டது. தேவர்கள் நஞ்சின் வெம்மையைத் தாங்க மாட்டாமல் ஓடினர். சிவபெருமான் நஞ்சை உண்டு கண்டத்தில் இருத்தித் திருநீலகண்டத்துக்குப் புகழ் தந்தார். அதன்பிறகு உச்சைச்ரவஸ் என்ற குதிரை, ஐராவதம் என்ற வெள்ளையானை, நினைத்ததைக் கொடுக்கும் கற்பகமரம், சந்திரன், அகலிகை, திருமகள், கௌஸ்துபமணி முதலியவை வெளிப்பட்டன. அதன்பின் அமுதம் வந்தது. அமுதத்தை அருந்தத் தேவர்களும் அசுரர்களும் சண்டையிட்டனர். தேவர்கள் வலிமை இழந்து பாம்பணையில் பள்ளிகொண்ட பரந்தாமனை வணங்கித் துதித்து வழிகாட்ட வேண்டினர். பக்தருக்கெளிய பரங்கருணைத் தடங்கடலாகிய நாராயணமூர்த்தி தேவருக்கருளத் திருவுளம் பற்றினான். மனங்கவரும் மோகினியாய் வடிவத்தை மாற்றிக் கொண்டான்.

*மலையால் குடைகவிழ்த்து மாவாய் பிளந்து*
*சிலையால் மராமரம் ஏழ் செற்றுக் - கொலையானைப்*
*போர்க்கோடு ஒசித்தனவும் பூங்குருந்தம் சாய்த்தனவும்*
*கார்க்கோடு பற்றியான் கை.*

என்று பொய்கையாழ்வார் போற்றும் திருக்கரங்களில் அமிர்தகலசத்தை ஏந்திக் கொண்டான். பெண்ணழகில் மயங்கிய அசுரர்கள் ஏமாற்றம் அடையப் பெருமான் கருணைக்குக் காத்திருந்த தேவர்களுக்கு இன்னமுதம் ஊட்டினான். பெண்ணழகில் சலனப்பட்டால் இறையின்பமாகிய அமிர்தம் கிடைக்காது என்பதையும் இறைவனைத் தொழுது தூமலர் தூவி நின்று அழுதவர்க்கே அமுதம் கிடைக்கும் என்பதையும் காட்டப் பெருமாள் மோகினியாக அவதாரம் எடுத்துத் திருப்பாற்கடலில் கடையப்பட்ட அமுதத்தைப் பாண்டிய நாட்டுத் திருமோகூரில் வழங்கியதால் இவ்வூர் மோகன க்ஷேத்திரம் என்றழைக்கப்பெற்று, மோகினியூராகி, மோகியூர் என்று வழங்கப்பெற்று இறுதியில் திருமோகூர் ஆயிற்று.

திருப்பாற்கடலைக் கடைந்தபோது, அதிலிருந்து ஒருதுளி இந்தத் தலத்தில் விழுந்தது என்றும், அந்த இடத்தில் தேவர்கள் ஒரு குளம் வெட்டினர் என்றும் அந்தக் குளத்தைத் திருப்பாற்கடல் (க்ஷீராப்தி தீர்த்தம்) என்றழைத்தனர் என்றும் மாத்சிய புராணம் கூறுகிறது. இதனாலேயே பெருமாள் பள்ளிகொண்ட பாற்கடல் வண்ணனாக இங்கே காட்சியளிக்கிறார். இங்கு ஆண்டுதோறும் தெப்ப உற்சவம் நடைபெற்று வந்து இடையில் நின்றது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு **11-4-98**- முதல் நடைபெற்று வருகிறது.

துவாபுர யுகத்தில் புலஸ்தியர் என்ற முனிவர் நாராயண மூர்த்தியைக் குறித்து இத்தலத்தில் தவம் செய்தார். மோகினியாக வந்த கோலத்தைக் காண விரும்பிய புலஸ்தியருக்குப் பெருமாள் அப்படியே காட்சி தந்தார். குழந்தைப் பேறில்லாத புலஸ்தியருக்கு விச்ருவர் என்ற மகன் பிறக்கவும் வரம் தந்தார்.

முனிவர்களும் தேவர்களும் வேண்டிக்கொண்டபடி, ஆரா அமுதாய் அலை கடலில் கண் வளரும் நாராயணமூர்த்தி,

தன்னுடைய பேரழகுத் திருவுருவை என்றும் யாரும் வழிபடத் தக்க வகையில் திவ்ய மங்களத் திருவுருவாக இந்தத் திருத்தலத்தில் காட்சி அருளினார்.

திங்களை வெல்லும் முகத்தைக் காட்டிச்
செங்கனி வாயில் தாமரை காட்டி
மங்கலம் பொலியும் கண்களைக் காட்டி
மலரும் முறுவல் இதழ்களைக் காட்டி
சங்கு சக்கரம் கைகளில் காட்டி
தவழ்மக ரக்குழை செவிகளில் காட்டி
பொங்கும் கருணைக்காள மேகமாய்ப்
பொலியும் மோகூர் ஆப்தன் தோன்றினான்.

மறுவும் திருவும் மார்பில் பொலிந்தன. வாரி வழங்கும் தோள்கள் மலைபோல் திகழ்ந்தன. விரல்கள் மோதிர வெளிச்சம் தந்தன விளங்கும் திருவடி "சரண்நான்" என்றது. நரர்கள் செய்த புண்ணியப் பலனாய் நான்கு தோள்களும் வேதமாய்த் தோன்றின. கரிய மேகமாய் அருள்மழை பொழியும் காளமேகமாய்க் கடவுள் தோன்றினார்.

விசுவகர்மா என்ற தேவசிற்பியால் இந்தக் கோயில் கட்டப்பெற்றது. கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காளமேகப் பெருமான் காட்சிதர, கோயிலின் விமானம் சதுர்முக விமானமாக அமைக்கப்பெற்றது. வைகாசி மாதம் அனுஷ நாளில் இத்திருமேனி ஆலயத்தில் அழகுற நிலைபெற்றது.

இத்தலத்தில் நான்முகன் தவம் செய்த வரலாற்றைப் பிரம்மாண்ட புராணம் குறிப்பிடுகிறது. நாராயணமூர்த்தி தன்னுடைய உந்திக் கமலத்திலிருந்து நான்முகனைப் படைத்தருளிய போது, நாராயணமூர்த்தியின் காதுகள் வழியாக மது, கைடபர் என்ற அரக்கர் இருவர் தோன்றினர். இவர்கள் நான்முகன் அருகில் இருந்த வேதங்களைத் திருடிக் கொண்டு போய்ப் பாதாளலோகத்தில் மறைத்துவிட்டனர். பெருமாள் மச்சாவதாரம் எடுத்து அவற்றை மீட்டு வந்தார்.

இதையறிந்த அரக்கர் இருவரும் எம்பெருமான் நாபிக்கமலத்திலிருந்து செல்லக் கூடிய தாமரைத் தண்டினைப் பிடித்து ஆட்டி நான்முகனுக்குத் துன்பம் தந்தனர். சினம் கொண்ட திருமால் அரக்கர்களைத் தூக்கித் தன் தொடையில் அடித்து முறித்துக் கடலில் தூக்கி எறிந்தார். தனக்கு வந்த துன்பத்தை நீக்கியும் வேதங்களைத் தந்தும் காப்பாற்றிய திருமாலுக்கு நன்றி செலுத்த எண்ணிய நான்முகன் இங்கு ஒரு திருக்குளம் உண்டாக்கினான். அது பிரம்மதீர்த்தம் என்றழைக்கப்பட்டது.

மூலவர் காளமேகமாய் காட்சி தர, உற்சவர் ஐந்து படைக்கலங்களோடும் காட்சியளிக்கிறார். இவரைக் குடமாடுகூத்தன் என்றும் தயரதன் பெற்ற மரகத மணித்தடம் என்றும், சுடர்கொள் சோதி என்றும் திருமோகூர் ஆத்தன் என்றும் ஆழ்வார்கள் பாடிப் பரவுகிறார்கள்.

*படிதாண்டாப் பத்தினி*

தாயார், மோகனவல்லித் தாயார் என்றும் மோகவல்லி என்றும் திருமோகூர் வல்லி என்றும் அழைக்கப்படுகிறார். கருணை பொலியும் திருமுகத்தோடு காட்சி தரும் தாயாரைப் பார்க்கும் பொழுது பாற்கடலில் இருந்து அமுதம் பெற்ற தேவர்களை விட, பாற்கடலில் இருந்து இந்தத் திருமகளைப் பெற்று மார்பில் வைத்துக் கொண்டு "வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" என்று பெரியாழ்வாரைப் பாடவைத்த பெருமாள் மிகவும் கொடுத்து வைத்தவர் என்று தோன்றுகிறது. திருவீதிவுலா வரும்போது பெருமாள் மட்டுமே கோயிலுக்கு வெளியில் செல்வார். தாயார் எந்தக் காலத்திலும் சந்நிதிப் படியைத் தாண்டியதில்லை என்பதால் இந்த அன்னையைப் படிதாண்டாப் பத்தினி என்று பக்தர்கள் பரவிப் போற்றுகிறார்கள்.

*திருவாழியாழ்வான் எனப்படும் சக்கரத்தாழ்வார்*

திருமோகூர் என்றாலே சக்கரத்தாழ்வார் நினைவில் தோன்றுவார். காளமேகப் பெருமான் கருவறைக்கு வலப்பக்கத்தில் தாயார் சந்நிதிக்குப் பின்புறமாக அருளாற்றல்

மிக்க சக்கரத்தாழ்வாரின் சந்நிதி திகழ்கிறது. பெருமாளுக்குரிய ஐந்து படைக் கலங்களில் முதன்மை உடையதும் ஆதியும் அந்தமும் அற்றதும், அவதாரங்களில் எல்லாம் பெருமானை விட்டுப் பிரியாததுமான சக்ராயுதம் திருவாழி ஆழ்வான் எனப் புகழப்படுவது. இந்தப் படைக்கலத்தைச் சுதர்சனம் என்றழைப்பர். சுதர்சனம் என்றால் காட்சிக்கு இனியர் என்றும் நல்வழி காட்டும் நாயகர் என்றும் பொருள். சுதர்சனமே திருமால் என்று வழிபடும் மரபும் உண்டு.

இந்தச் சந்நிதியில், முன்புறம் சக்கரத்தாழ்வாராகவும் பின்புறம் நரசிங்கப் பெருமான் ஆகவும் திருவாழி ஆழ்வார் திருக்கோலம் திகழ்கிறது. நாற்பத்தெட்டுத் தேவதைகள் சுற்றிலும் இருக்க, ஆறுவட்டங்களுக்குள் 154 எழுத்துக்கள் பொறித்திருக்க, பதினாறு திருக்கரங்களிலும் பதினாறு படைக்கலங்கள் ஏந்தி மூன்று கண்களுடன் சக்கரத்தாழ்வார் காட்சியளிக்கிறார். திருமுடி தீப்போல் ஒளிர்கிறது. அருள்புரிய ஓடி வருவதைப்போலச் சுழலும் திருவடிகள் தோற்றம் அளிக்கின்றன. நரசிங்கப் பெருமான் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் அருளும் நான்கு திருக்கரங்களோடு காட்சியளிக்கிறார். யோக நிலையில், நான்கு திருக்கரங்களிலும் நான்கு புருஷார்த்தங்களையும் வழங்கும் நான்குவித சக்ராயுதங்களை ஏந்தி கால்களை மடித்துக் காட்சி தரும் நரசிங்கப் பெருமானைப் பார்க்கும் போது

நாடி நாடி நரசிங்கா என்று
வாடி வாடும் இவ் வாணுதலே

என்று நினைக்கத் தோன்றுகிறது. மூலவர் மட்டுமின்றி உற்சவரும் இதேபோல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சுதர்சன ஆழ்வாரையும் இங்கே உலக நன்மைக்காக நடத்தப்படும் சுதர்சன வேள்வியையும் காணக்கண் கோடி வேண்டும். இப்பெருமானை ஆறுமுறையோ ஆறின் மடங்குகளிலோ வலம் வந்தால் நினைத்த செயல்கள் நடக்கின்றன. வேண்டுதல்கள் வேண்டியபடி விரைவில் நிகழ்கின்றன. இச்சந்நிதியில் ஆனி மாதம் சித்திரை நாளில் சக்கரத்தாழ்வார் திருநட்சத்திரத்தில் ஆண்டுதோறும் சுதர்சன வேள்வி நிகழ்கின்றது. மரண பயத்தை

மாற்றியும், மனோவியாதியை ஒழித்தும், கன்னியருக்கு மாலை கொடுத்தும் காளையருக்கு வேலை கொடுத்தும், வணிக நிலையில் உயர்வு தந்தும் மக்கட்பேற்றை வளமுறக் கொடுத்தும் நரசிம்ம சுதர்சனப் பெருமாள் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகக் காட்சியளிக்கிறார்.

## பள்ளிகொண்ட பெருமாள்

ஆடிவீதி எனப்படும் இரண்டாம் திருச்சுற்றில் தெற்குப் பகுதியில் வடக்குப் பார்த்த ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. ஆடி வீதியின் வட கிழக்கில் பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமாளைக் காண்கிறோம். பள்ளி கொண்ட திருக்கோலத்தை போகசயனம், வீரசயனம், பால சயனம், ஸ்தல சயனம், உத்தான சயனம், அனந்த சயனம், பிரார்த்தனா சயனம் என ஏழு வகையாகக் குறிப்பதுண்டு. இத்தலத்தில் பெருமாள் பிரார்த்தனா சயனத்தில் காட்சியளிக்கிறார். பெருமான் பள்ளி எழுந்தருள வேண்டுமென்று தாயார்கள் இருவரும் இருகரம் கூப்பிப் பிரார்த்தனை செய்யும் வண்ணம் இச் சந்நிதி அமைக்கப்பட்டதால் பிரார்த்தனா சயனம் எனப்படுகிறது. திருவரங்கப் பெருமாளைப் போல இவரும் தெற்கு நோக்கி (தென் திசை இலங்கை நோக்கிப்) பள்ளி கொண்டதால் தன்னை வணங்கும் பக்தர்களுக்கு வெற்றியளிப்பவராகத் திகழ்கிறார். படர்கொள் பாம்பணைப் பள்ளி கொள்வான் என்று நம்மாழ்வார் இப்பெருமானைப் பாடுகிறார். துவாதசி நாளில் பள்ளிகொண்ட பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்வித்தால் எல்லா நன்மைகளும் வந்தடையும் என்பது அனுபவித்தவர் கண்ட உண்மை.

## ஆழ்வார்களைக் கவர்ந்த ஆப்தன்

வேதம் தமிழ் செய்த மாறன் என்று புகழப் பெற்றவர் நம்மாழ்வார். மற்ற முனிவர்கள் தங்கள் தவத்தால் வந்த ஞானத்தால் பெருமானைப் பாடினார்கள். நம்மாழ்வார் ஒரு காரணமும் பற்றாமல், இறைவன் திருவருளால் வந்த ஞானத்தினால் பக்தி நிலை அடைந்து, அன்புபெருக அகங்கரைந்துஉருக, அழுதழுது பாமாலைகள் தொடுத்தார். அவன்

செய்த ஒவ்வொரு செயலையும் நினைந்து மூவாறு மாதம் மோகித்துப் பாடினார்.

அருளின பக்தியாலே உள்கலங்கிச் சோகித்து மூவாறு மாதம் மோகித்து வருந்தி ஏங்கித் தாழ்ந்த
சொற்களாலே நூற்கிற இவர் (சூத்திரம் 58)

என்று ஆசார்ய ஹிருதயம் என்ற நூல் பேசுகிறது. நம்மாழ்வாரின் மனங்கவர்ந்த பெருமான் காளமேகப்பிரான். ஆழ்வார் திருநாடாகிய வைகுண்டத்துக்கு எழுந்தருளும் போது வழித்துணையாக வரும்படி பெருமானை அழைக்கிறார். அந்தப் பெருமான் கருடனை அனுப்பாமல் ஆதிசேடனை அழைத்து ஆழ்வாருக்குத் துணைபோகச் சொல்லாமல், கன்றழைக்க ஓடிவரும் பசுவைப் போலத் தானே காட்சி தந்து, நம்மாழ்வாரை வைகுண்டப் பாதையான அர்ச்சிராதிகதியில் வழிகாட்டி அழைத்துச் செல்கிறான். அவன் அழகில் ஈடுபட்ட ஆழ்வார் அப்பெருமானுடைய தோள் அழகும், கண்ணழகும், வாயழகும் கண்டு, வாயாரப் பாடி மனமார வழிபடுகிறார்.

*தாள தாமரைத் தடமணிவயல் திருமோகூர்*
*நாளு மேவி நன்கமர்ந்து நின்று அசுரரைத் தகர்க்கும்*
*தோளும் நான்குடைச் சுரிகுழல் கமலக்கண் கனிவாய்க்*
*காளமேகத்தை அன்றி மற்றொன்று இலம் கதியே (3891).*

வழித்துணைவருபவன் காளமேகம் தான். அப்பெருமானை விட்டால் வேறு யார் நமக்குக் கதியாவார்கள்? அவன் நான்கு தோள்களும் சுரிகுழலும், கண்களும் அன்றி வேறு எதையும் காணாத ஆழ்வார் தான்பெற்ற பேற்றை நாமும் பெற வேண்டுமென்று, கண்ட காட்சியை விண்டுரைக்கிறார். இங்கே ஓர் ஐயம் எழுகிறது. அழைக்க வந்த பெருமான் முன்னே செல்ல, ஆழ்வார் பின்னே செல்கிறார். அவர் பின்னழகைத் தானே பார்க்க முடியும்? அவனுடைய திருக்கண்களையும் திருவதரத்தினையும் எவ்வாறு பார்க்க முடியும்? இது கற்பனையோ என்று நாம் எண்ணுகிறோம். பெருமான் அருள் பெற்ற ஆழ்வார்கள் அவனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள். எதை

அனுபவித்தார்களோ அதையே தாமும் அனுபவிக்கும் பேறு பெற்ற ஈட்டாசிரியர் நம்பிள்ளை என்பவர் இந்த ஐயத்தைப் போக்கி அருளி நம்மையும் அவன் பால் ஈடுபட வைக்கிறார்.

நம்மாழ்வார் ஆகிய ஆன்மாவை அழைத்துச் செல்ல வந்த பெருமாளாகிய ஆண்டவன், முன்பக்கமே பார்த்துக் கொண்டு செல்லாமல், பின்னால் வரக்கூடிய ஆன்மா மாயையில் மயங்கிப் பாதி வழியில் நின்று விடுகிறதோ, அப்படி நின்று விட்டால் நம்முடைய பார்வையைத் தவிர அதற்கு வேறு கதியில்லை என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போகிறான். அதனால் அவனுடைய வாயழகும் கண்ணழகும் தன்னை இழுக்க, மகிழ்ந்து பாடுகிறார் ஆழ்வார் என்பது நம்பிள்ளையின் விளக்கம். காளமேகப் பெருமானைப் பதினொரு திருப்பாடல்கள் மூலம் மங்களாசாசனம் செய்கிறார் நம்மாழ்வார். நம்பத்தக்க உயிர்த்தோழனை ஆப்தன் என்றழைப்பது போல இப்பெருமானை அழைக்கிறார்.

*கூத்தன் கோவலன் குதற்றுவல் அசுரர்கள் கூற்றம்*
*ஏத்தும் நங்கட்கும் அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன்*
*வாய்த்த தண்பணை வளவயல் சூழ் திருமோகூர்*
*ஆத்தன் தாமரை அடி அன்றி மற்றிலம் அரணே (3896).*

நம்மாழ்வார் பாடியபடி திருமோகூர் ஆலயத்தில் திகழும் உற்சவமூர்த்தி ஆப்தன் என்றே அழைக்கப்படுகிறார். காளமேகத்தின் கருணைக் கடைக்கண் பார்வை பெற்ற ஆழ்வார் அப்பெருமானை ஆயிரம் பேர் உடை அம்மான் (3892) என்றும் வென்று இம்மூவுலகு அளித்து உழல்வான் (3893) என்றும் படர்கொள் பாம்பணைப் பள்ளி கொள்வான் (3894) என்றும் நம் சுடர் ஒளி ஒரு தனி முதல்வன் (3895) என்றும் தயரதன் பெற்ற மரகத மணித்தடம் (3898) என்றும் பாடி நாம் அடைந்த நல்லரண் நமக்கு என்று மகிழ்ச்சிக் கடலில் திளைக்கிறார்.

*<u>மணவாள மாமுனிகள்</u>*

நம்மாழ்வார் பெருமையை விளக்கும் "திருவாய்மொழி

நூற்றந்தாதி" பாடிய மணவாள மாமுனிகள் காளமேகப் பெருமானைப் பற்றிக் கொண்ட நம்மாழ்வார் திருப்பெயரைச் சொன்னாலே நம்முடைய துன்பங்கள் எல்லாம் ஓடிவிடும் என்கிறார்.

*தாளடைந்தோர் தங்கட்குத் தானே வழித்துணையாம்*
*காளமே கத்தைக் கதியாக்கி – மீளுதலாம்*
*ஏதமிலா விண்ணுலகில் ஏகவெண்ணும் மாறன் எனக்*
*கேதமுள்ள தெல்லாம் கெடும்.*

என்பது அவர் திருப்பாடல்.

*அழகியமணவாளப் பெருமாள் நாயனார்*

நம்மாழ்வார் திருவுள்ளக் கருத்தை அனைவரும் அறியும்படி நூல் எழுதியவர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். அந்த நூலுக்கு ஆசாரிய ஹிருதயம் (மாறன் மனம்) என்று பெயர். இந்நூலில் 234 சூத்திரங்கள் உள்ளன. அவற்றுள் 182 ஆவது சூத்திரம் திருமோகூர்ப் பெருமான் புகழைப் பாடுகிறது.

*மார்க்கபந்து சைத்யம் மோகனத்தே மடுவிடும்*

என்பது அவர்வாக்கு. மார்க்கபந்து – வழித்துணைவன். சைத்யம்– குளிர்ச்சி. நாம் செல்ல அஞ்சும் தனி வழிக்குத் துணையாக வரும் பெருமானுடைய அருளாகிய குளிர்ச்சி மோகனத்தலமான திருமோகூரில் மலையில் உள்ள தண்ணீர் போல என்றும் நிறைந்து நிலைபெற்று நிற்கும். ஆற்று நீர் ஓடிவிடும். கிணற்று நீர் வறண்டு விடும். மலையில் உள்ள சுனைநீர் வற்றாது. மற்ற துணைகள் துணையல்ல. காளமேகத்தின் துணையே நிலையான துணை என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருள்வாக்காகும். மரகத மணித்தடம் என்ற ஆழ்வார் வாக்கின் பெருமை, இந்தக் குளிர்ச்சியால் வெளிப்படுகிறது.

*மடலேறும் ஆழ்வாரின் மனங்கவர்ந்த அருளாளன்*

வேதத்தைத் தமிழாக்கியவர் நம்மாழ்வார். அவருடைய

நான்மறைக்கும் ஆறங்கமாக பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் ஆகியவற்றை அருளியவர் திருமங்கையாழ்வார். இவரைப் பரகால நாயகி என்றும் நம்மாழ்வாரைப் பராங்குச நாயகி என்றும் கூறுவர். இந்த இரு நாயகியர் மனங்கவர்ந்த பெருமான் காளமேகப் பிரானைத் திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில் பாடுகிறார். என் மனம் கவர்ந்த பெருமானைத் தேடிப் போகிறேன். ஓர் யானையின் கொம்பை முறித்து ஓர் யானையின் துன்பம் தீர்த்த பெருமானை, தேன் துழாய்த் தாரானைத் தாமரை போல் கண்ணானை அவன் இருக்கும் திருத்தலங்களுக்கெல்லாம் சென்று காணப்போகிறேன். என் காதலை அவனுக்கு எடுத்துக் காட்ட பனைமடலைக் கொண்டு மடல் ஊர்வேன் என்று பேசும் திருமங்கையாழ்வார் திருமால் உறையும் திருத்தலங்களைக் குறிப்பிடும் பொழுது, அழகர்கோயில் எனப்படும் திருமாலிருஞ்சோலையையும் திருமோகூரையும் ஒரே வரியில் வைத்து

*ஏர்ஆர் பொழில்சூழ் இடவெந்தை, நீர்மலை,*
*சீராரும் மாலிருஞ் சோலை திருமோகூர்*
*என்று பாடுகிறார்.*

*ஐயங்கார் அனுப்பி வைத்த அன்னம்*

அஷ்டப் பிரபந்தம் எனப்படும் எட்டுத் திருநூல்களைப் பாடிய பெருமைக்குரியவர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். கண்ணனையே கண்டு காயாம்பூ வண்ணனையே வாழ்த்திய அந்தப் பெருமகனார் திருமோகூர்க் காளமேகத்தைக் காதலிக்கும் காதலியாக மாறினார். தன் காதலன்பால் அன்னப் பறவையைத் தூதுவிட்டார். அன்னம் வரத் தாமதமாயிற்று. அவருக்கு ஐயம் வந்துவிட்டது. நான் அனுப்பிவைத்த அன்னம், வளமான வயல் சூழ்ந்த திருமோகூர் செல்லும் வழியில் உள்ள குளங்களில் எல்லாம் மேயுமோ அல்லது அப்படி மேயாமல் அந்தப் பெருமான்பால் விரைந்து செல்லுமோ – என் துயரைச் சொல்லுமோ – நாளை திரும்பி வருமோ என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு தலைவனை எண்ணித் தவித்து நிற்கிறார்.

வாயால் மலர் கோதி வாவிதொறும் மேயுமோ?
மேயாமல் அப்பால் விரையுமோ? - மாயன்
திருமோகூர் வாய்இன்று சேருமோ? நாளை
வருமோ? கூர் வாயன்னம் வாழ்ந்து.

என்பது அவர் பாடிய நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில் உள்ள அழகான திருவெண்பா.

<u>நாள் வழிபாடும் உற்சவங்களும்</u>

காளமேகப் பெருமான் திருக்கோயிலில் காலை 7 மணிக்கு விஸ்வரூப தரிசனம், 8.30 மணிக்குப் பொங்கல் காலம், 10 மணிக்குக் காலசந்தி, பகல் 12 மணிக்கு உச்சிக்காலம், மாலை 6 மணிக்கு சாயரட்சை சுற்றுக் கோயில் ஆராதனம், இரவு 8 மணிக்கு சம்பா காலம் ஆகிய ஆறுகால வழிபாடுகள் பாஞ்சராத்ர ஆகம முறையில் நிகழ்கின்றன.

ஒவ்வொரு மாதமும் திருவோணத் திருநாளில் ஆப்தன் என்று போற்றப்பெறும் உற்சவர் எழுந்தருளுகிறார். சித்திரை முதல் நாளில் காளமேகப் பெருமானைக் கண்டு வணங்கப் பெருந்திரளாக மக்கள் கூடுகிறார்கள். நம்மாழ்வார் வைகாசி விசாகத்தில் தோன்றியுள்ளதால் விசாகத்தை நிறைவு நாளாக வைத்து பத்து நாட்கள் கொடியேற்றி திருத்தேர், தீர்த்தவாரியுடன் பிரம்மோற்சவம் நடக்கிறது. ஆனியில் முப்பழ உற்சவம், ஆவணியில் திருப்பவித்ர உற்சவம், புரட்டாசியில் நவராத்திரி உற்சவம், ஐப்பசியில் தீபாவளியன்று மூலவருக்குத் தைலக்காப்புச் சாற்றும் திருநாள், கார்த்திகையில் தீபஉற்சவம், கைசிக புராணம் படிக்கும் உற்சவம். மார்கழியில் வைகுண்ட ஏகாதசி உற்சவம், நம்மாழ்வார் சாற்று முறை பகல், இராப்பத்து உற்சவங்கள், மாசியில் கஜேந்திரனுக்கு மோட்சம் கொடுத்தல், பங்குனி உத்திரத்தில் திருமகள். நிலமகள், ஆண்டாள், மோகன வல்லித் தாயார்களோடு தாயார் சந்நிதியில் பெருமாள் எழுந்தருளித் திருக்கல்யாணம் நடக்கும் உற்சவம் என்று ஆண்டு முழுவதும் உற்சவங்கள் நடக்கின்றன. திருமோகூர் விழாமலி மூதூராகக் காட்சியளிக்கிறது.

இந்த உற்சவங்களில் குறிப்பிடத்தக்கது கஜேந்திரமோட்ச உற்சவமாகும். ஆதிமூலமே என்றழைத்த யானையை முதலையின் பிடியிலிருந்து காப்பாற்றிய பெருமான் பெருமையைப் பாடாதவர் இல்லை.

*துப்புடையாரை அடைவதெல்லாம்*
*சோர்விடத்துத் துணை ஆவர் என்றே*
*ஒப்பிலேன் ஆகிலும் நின்னடைந்தேன்*
*ஆனைக்கு நீ அருள் செய்தமையால்*
*எய்ப்பு என்னை வந்து நலியும் போது அங்கு*
*ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன்.*
*அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்*
*அரங்கத் தரவணைப் பள்ளியானே.*

என்று பெரியாழ்வார் பாடுகிறார். யானைக்கு அருளிய கருணையை எனக்கும் அருள்புரிய வேண்டும் என்று பக்தர்கள் கேட்க, திருமோகூர்ப் பெருமான் மாசி மாதம் பௌர்ணமி நாளில் கள்ளர் திருக்கோலம் தாங்கிப் புறப்படுகிறார். பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கர்னல் ஹெரான் என்ற வெள்ளையன் திருமோகூர் உற்சவமூர்த்தியைக் கவர்ந்து சென்று அழகர் கோயிலில் முகாமிட்டிருந்த போது, கள்ளர் குலத்தைச் சேர்ந்த வீரமறவர்கள் பெருங்கூட்டமாகச் சென்று, உற்சவரை மீட்டு வந்து திருமோகூரில் வைத்தனர். இதை நினைவூட்டும் வகையில் நன்றிப் பெருக்குடன் பெருமாள் கள்ளர் திருக்கோலம் தாங்கிப் புறப்படுகிறார். காலையில் கிளம்பிய பெருமாள் பல மண்டகப்படிகளில் எழுந்தருளி மாலை 5 மணியளவில் யானைமலை நரசிங்கப் பெருமாள் திருக்கோயிலுக்குச் செல்லுகிறார். அன்றிரவு மோகினி அவதாரத்துடன் எண்ணெய்க் காப்புச் சாற்றித் திருமஞ்சனம் ஆகும். அதன்பின் கோயிலுக்கு எதிரில் உள்ள குளத்தில் கஜேந்திர மோட்சக் காட்சிகள் நடக்கும் பெருமாள் கருட வாகனத்தில் எழுந்தருளுவார். கஜேந்திர மோட்ச புராணம் படிக்கப்படும். அதன் பிறகு பெருமாள் மறுநாள் திருமோகூர் திரும்புவார்.

இந்த ஆலயத் தலவிருட்சம் வில்வமரம் ஆகும். இந்த ஆலயம் தென்கலை சம்பிரதாயத்தைத் தழுவியது. இத்திருக்கோயிலில் திருவாய்மொழிப்பிள்ளை வம்சத்தினருக்கு முதல் தீர்த்த மரியாதைகள் கைசிகபுராண படலம் பிரம்ம ரதம் முதலிய சிறப்புகளில் செய்யப்படுகின்றன. பழைய காலத்தில் திருமோகூர் ஜீயர் இங்கு வாழ்ந்து சம்பிரதாய நிர்வாகம் செய்து வந்தார். அதன் நினைவாக இன்றும் புறப்பாட்டில் அவருடைய திருவுருவத்தின் முன் அருளிச் செயல் தொடங்கப்படுகிறது.

திருப்பணி

புதியதோர் கோயிலை அமைப்பதை விட பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியம் தரும். திருப்பிரதிட்டை செய்தவர்களைவிட ஜீர்ணோத்தாரணம் (திருப்பணி) செய்தவர்களே முக்கியமானவர்கள் என்று வைணவ ஆசாரியர்கள் கூறுவர்.

1924 – இல் கோவில் நிதியினின்று செலவு செய்து குடமுழுக்கு நடைபெற்றது. 1936 – இல் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய்து கோவில் மண்டபங்கள், தளவரிசைகள் பழுது பார்க்கப்பட்டு சந்நிதிக் கதவுகள் புதுப்பிக்கப்பட்டன. 20.5.58 – இல் அறங்காவலர்கள், சௌராஷ்டிர வகுப்பினர் ஒத்துழைப்புடன் மின் விளக்குகள் அமைத்தனர். 1963ல் பதினாறு கால் மண்டபம், உள் மண்டபம் அரசு மானியம் மூலம் புதுப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 7.2.79 – இல் மகா கும்பாபிஷேகமும் அதன் பின்னர் 30.4.90 – இல் பள்ளிகொண்ட பெருமாள் சன்னதிக்கு புதிய விமானம் கட்டி கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது. சமீபத்தில் 2009 – ல் மகா சம்புரோட்சணம் நடைபெற்றது.

*நிர்வாகம்*

திருக்கோவில் 1897 ஆம் ஆண்டு முதல் மதுரை மாவட்டம் தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையில் இருந்து வந்தது. 1948 ஆம் ஆண்டிலிருந்து இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. 1980 வரை அழகர்கோவில் அருள்மிகு கள்ளழகர் தேவஸ்தானத்துடன் இணைந்து இருந்தது. 1981 முதல் தனிச் செயல் அலுவலரும் அறங்காவலர் குழுவும் நியமிக்கப்பட்டு நிர்வாகிக்கப்பட்டு வருகிறது.

*நிறைவுரை*

நூற்றெட்டுத் திவ்ய தேசங்களில் பெருமாள் அர்ச்சாவதார மூர்த்தியாகக் காட்சிதந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கிறார். இவற்றுள் நின்ற கோலம் கிடந்த கோலம் இரண்டையும் காட்டி, ஆன்மா வைகுண்டம் செல்லும் போது வழிகாட்டியாகத் தோன்றி, திரும்பித் திரும்பிப் பார்த்து, அழைத்துச் செல்பவர் திருமோகூர் காளமேகப் பெருமாள். அவர் திருவடிகளைப் பற்றிக் கொண்டு வையத்தில் வாழவும் வைகுண்டத்தில் நிலை பெறவும் வழிசெய்து கொள்வது நம்முடைய அவசியமான கடமையாகும்.

திருவாய்மொழி 10ஆம் பத்து முதல் திருவாய்மொழி :

தாளதாமரை

தாளதாமரைத் தடமணிவயல் திருமோகூர்
நாளுமேவி நன்கமர்ந்துநின் றசுரரைத்தகர்க்கும்
தோளும்நான்குடைச் சுரிகுழற் கமலக்கட்கனிவாய்க்
காளமேகத்தையன்றி மற்றொன்றிலங்கதியே. (1)

இலங்கதிமற்றொன்றெம்மைக்குமீன் தண்டுழாயின்
அலங்கலங்கண்ணியாயிரம் பேருடையம்மான்
நலங்கொள் நான்மறைவாணர்கள் வாழ்திருமோகூர்
நலங்கழலவனடிநிழல் தடமன்றியாமே. (2)

அன்றியாமொருபுகலிடமிலம் என்றென்றலற்றி
நின்றுநான்முகன் அரனொடுதேவர்கள் நாட
வென்றிம்மூவுலகளித்துழல்வான் திருமோகூர்
நன்றுநாமினிநணுகுதும் நமதிடர் கெடவே. (3)

இடர்கெட எம்மைப்போந்தளியாய் என்றென்றேத்திச்
சுடர்கொள் சோதியைத் தேவரும் முனிவரும் தொடரப்
படர்கொள் பாம்பணைப்பள்ளி கொள்வான் திருமோகூர்
இடர்கெட அடிபரவுதுந் தொண்டீர்வம்மினே. (4)

தொண்டீர்! வம்மின் நம்சுடரொளியொரு தனிமுதல்வன்
அண்டமூவுலகளந்தவன் அணிதிருமோகூர்
எண்டிசையுமீன் கரும்பொடு பெருஞ்செந்நெல்விளையக்
கொண்டகோயிலை வலஞ்செய்திங்காடுதுங் கூத்தே. (5)

கூத்தன்கோவலன் குதற்றுவல்லசுரர்கள் கூற்றம்
ஏத்தும் நங்கட்கும் அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன்
வாய்த்த தண்பணைவளவயல்சூழ் திருமோகூர்
ஆத்தன் தாமரையடியன்றிமற்றிலம் அரணே. (6)

மற்றிலம்அரண் வான்பெரும்பாழ் தனிமுதலாச்
சுற்றும் நீர்படைத்து அதன் வழித்தொன்முனிமுதலா
முற்றுந்தேவரோ டுலகுசெய்வான் திருமோகூர்
சுற்றிநாம்வலஞ்செய்ய நம் துயர் கெடும் கடிதே. (7)

துயர்கெடும் கடிதடைந்துவந்தடியவர்தொழுமின்
உயர்கொள்சோலை ஒண்டடமணியொளி திருமோகூர்
பெயர்களாயிர முடையவல்லரக்கர் புக்கழுந்தத்
தயரதன் பெற்ற மரகதமணித் தடத்தினையே. (8)

மணித்தடத்தடி மலர்க்கண்கள் பவளச் செவ்வாய்
அணிக்கொள் நாற்றடந்தோள்தெய்வம் அசுரரையென்றும்
துணிக்கும்வல்லரட்டன் உறைபொழில் திருமோகூர்
நணித்து நம்முடைநல்லரண் நாமடைந்தனமே. (9)

நாமடைந்த நல்லரண்நமக்கென்று நல்லமரர்
தீமைசெய்யும் வல்லசுரரை அஞ்சிச் சென்றடைந்தால்
காமரூபங்கொண்டு எழுந்தளிப்பான் திருமோகூர்
நாமமேநவின்றெண்ணுமின் ஏத்துமின்நமர்காள். (10)

ஏத்துமின்நமர்காள் என்றுதான் குடமாடு
கூத்தனைக் *குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள்
வாய்த்தவாயிரத்துள் இவை வண் திருமோகூர்க்கு
ஈத்தபத்திவை யேத்தவல்லார்க் கிடர்கெடுமே. (11)

சிறிய திருமடல்

*சீராரும் மாலிருந்சோலை திருமோகூர்

– திருமங்கையாழ்வார்.

# பகுதி : இரண்டு

## *திருமோகூர் காளமேகப்பெருமாள் கோவில்*

டாக்டர். வெ.வேதாசலம், எம்.ஏ.பி.எச்.டி.
தொல்லியல்துறை,
மதுரை.

பாண்டியரின் தலைநகரமாகத் திகழ்ந்த மதுரை மாநகருக்கு வடக்கே ஆனைமலைக்குக் கிழக்கே உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க வைணவத் தலம் திருமோகூர். மோகனபுரம், கோயில்குடி, திரும்பூர் என்ற பல பெயர்கள் இதற்கு உண்டு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்ககாலத்தில் பழையன் என்ற சிற்றரசனுக்கு உரிய ஊராக இது விளங்கியது என்று கருதுகின்றனர். அதில் சிறப்புமிக்க அறங்கூறும் நீதிசபை ஒன்று இருந்தது. கோசர்கள் என்ற வீரர்கள் அங்கு இருந்தனர்.

மோரியர்படை மோகூரைத் தாக்கிய போது பழையனுக்கு உறுதுணை புரிவதாக உறுதிமொழி அளித்திருந்த கோசர்கள் மோகூர் அவையகத்து ஆலமரத்தடியில் தோன்றி மோரியரை வென்று துரத்தினர். இவ்வூரில் குறுநிலமன்னன் பழையன் காத்து நின்ற காவல்மரமான வேம்பை சேரன் செங்குட்டுவன் வெட்டி வீழ்த்தினான் என்று சங்க இலக்கியங்களான மதுரைக் காஞ்சி, பதிற்றுப்பத்து, அகநானூறு முதலிய இலக்கியங்களில் மோகூர் பற்றிய செய்திகள் வருகின்றன.1 சிலப்பதிகாரத்திலும் மோகூர் பழையனின் காவல்மரமான வேம்பினைச் செங்குட்டுவன் வெட்டியழித்த செய்தி வருகின்றது. 2 சங்ககாலத்து தமிழ்நாட்டு நகரங்களைப் பற்றிக் குறிப்பிடும் தாலமி என்ற அலெக்சாண்டிரியாவின் வெளிநாட்டு ஆசிரியர் (கி.பி.140) தமிழ்நாட்டின் உள்நாட்டு நகரங்களில் ஒன்றாக மோகூரைக் குறிப்பிட்டுச் சென்றிருக்கின்றார். 3 இதனால் மோகூர் என்று பெயர்பெற்று விளங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம் சங்ககாலத்தில் தமிழ் மன்னர் ஆட்சியில் இருந்திருக்கிறது என்று கூறலாம். ஆனால் சங்ககாலத்தில் குறுநிலமன்னன் பழையன்

காத்து நின்ற மோகூரே தற்போது வழங்கும் திருமோகூரா என்பதை வருங்காலத்தில் கிடைக்கும் வரலாற்றுச் சான்றுகள் தான் உறுதிப்படுத்த வேண்டும்.

திருமோகூர் சங்ககாலத்திற்குப் பின்னர் வைணவ வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்ற சமயத்தலமாக மாறியுள்ளது. கி.பி. 8,9 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பாசுரங்களில் இடம் பெற்றுள்ளது. இத்தலத்தில் திருமால் மோகினி அவதாரம் எடுத்ததாகக் கூறப்படுகிறது. நூற்றெட்டு திவ்யதேசங்களில் ஒன்றாகப் பாண்டிநாட்டு திவ்ய தேசமாக விளங்கி வருகிறது. இத்திருத்தலத்திலுள்ள காளமேகப்பெருமாள் கோயிலை ஆழ்வார்கள் மட்டுமன்றி விசயநகரவேந்தர், நாயக்கர் காலங்களில் தோன்றிய ஆசாரியர்களும் புலவர்களும் பாடிப்பரவியுள்ளர். வடமொழிப் புராணங்களில் இத்தலத்தின் வரலாறு இடம் பெற்றுள்ளது. வைணவ ஆசாரியர்களான மணவாளமாமுனிகள் இயற்றிய திருவாய்மொழி நூற்றந்தாதியிலும் அழகிய மணவாளப் பெருமாள் இயற்றிய ஆசார்யஹிருதயம் என்ற வடமொழிச் சூத்திரத்திலும் திருமோகூர்கோயில் பெருமாளின் சிறப்பு கூறப்படுகிறது. மேலும் சிலேடைக் கவிஞர் காளமேகமும் தனிப்பாடல் ஒன்றின் மூலம் திருமோகூர் காளமேகத்தின் அருஞ்செயல்களைத் தொகுத்துப் பாடியுள்ளார். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து அஷ்டபிரபந்தம் என்னும்எட்டுவகைச் சிற்றிலக்கியங்களை இயற்றிய இருமொழிப்புலமைபடைத்த அழகிய மணவாளதாசர் என்ற பெயர் கொண்ட பெரும்புலவர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் ஆவார். வைணவப் பெரியாரான இவரும் தாம் இயற்றிய நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் திருமோகூர் திருத்தலத்தைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

திருமோகூர் கோயிலில் உள்ள பிற்காலப்பாண்டியர், விசயநகரவேந்தர், நாயக்கர்கால கல்வெட்டுகள் பல இக்கோயிலின் வரலாற்றை அறிய உதவுகின்றன. இக்கல்வெட்டுக்களில் இத்தலம் பாண்டிநாட்டில் தென்புறப்பு நாடு என்ற சிறிய உள்நாட்டுப் பிரிவில் இருந்த திருமோகூர் என்று

குறிப்பிடப்படுகின்றது. பாண்டியர், விசயநகரவேந்தர், மதுரை நாயக்கர், மருதுபாண்டியர் காலங்களில் தோற்றுவிக்கப்பட்ட விமானம், மண்டபங்கள், கோபுரம், திருச்சுற்றுமாளிகை, திருச்சுற்றுச்சுவர்கள், திருக்குளம் ஆகியவற்றுடன் திருமோகூர் காளமேகப்பெருமாள் கோயில் விளங்குகிறது. வடமொழிப்புராணங்கள், ஆழ்வார்பாசுரங்கள், ஆசாரியர், பெரும்புலவர்கள் பாடல்கள், கல்வெட்டுகள், கட்டடங்கள், இக்கோயிலின் வரலாற்றை அறிய பெருந்துணைபுரிகின்றன.

*திருக்கோவில் அமைப்பு*

இக்கோயிலில் குடிகொண்டிருக்கும் பெருமாள் காளமேகப் பெருமாள் என்றும் தாயார் மோகனவல்லித் தாயார் என்றும் அழைக்கப்படுகின்றனர். பள்ளிகொண்ட பெருமாளுக்கும் இங்கு தனிக்கோயில் எடுப்பிக்கப்பட்டுள்ளது. ஆண்டாளுக்கும் இங்கு சன்னதி உள்ளது. சக்கரத்தாழ்வார், அனுமார், நவநீதிகிருஷ்ணன், ஆகியோருக்கும் தனிச் சிற்றாலயங்கள் உள்ளன.

காளமேகப்பெருமாள் கோயில் கருவறையைச் சுற்றி இரண்டு பெரிய திருச்சுற்று மதில்களைக் கொண்டதாக விளங்குகிறது. இக்கோயிலின் முதல்சுற்று, இரண்டாம்சுற்று கிழக்கு வாயில்களில் சிறிய கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் நுழைவாயிலில் காணப்படும் கோபுரம் அண்மைக்காலத்தில் எடுக்கப்பட்டதாகும். அதனை அடுத்துக்காணப்படும் முதல்சுற்றுக் கோபுரம் விசயநகர வேந்தர்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. முதல் திருச்சுற்று மதிலும் இரண்டாம் திருச்சுற்று மதிலும் பிற்காலப்பாண்டியர் காலத்தில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்டுள்ளன. அவை விசய நகரவேந்தர், நாயக்கர்காலங்களில் கோட்டைச்சுவர் போன்று மிகவும் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளன. வெளிச்சுற்றுச் சுவரில் காணப்படும் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளுக்கு மேலே உள்ள பகுதி நாயக்கர் காலத்தில் எடுப்பிக்கப்பட்டுள்ளது என்பதற்கு கி.பி. 1700 – ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று சான்றாக விளங்குகிறது.4 இக்கல்வெட்டு திருச்சுற்றுமதில் கட்டும் திருப்பணியை மதுரைநாயக்க மன்னரின் தளவாய் நரசப்பையன் குமாரர்

வேங்கடப்பய்யன் செய்தார் அதற்குப் பழனியப்பன் என்பவர் துணைபுரிந்துள்ளார் என்று தெரிவிக்கிறது. நாயக்கர் காலத்தில் அன்னியர் படையெடுப்பிலிருந்து கோயிலின் செல்வங்கள் கொள்ளை போகாமல் இருப்பதற்காக இவ்வாறு உயரமாக திருமதில்கள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

காளமேகப்பெருமாள் கோவில் விமானம் சதுரவடிவில் அமைந்த கருவறை அதன் முன்னர் அர்த்தமண்டபம், மகாமண்டபம், கருடமண்டபம் (முன்மண்டபம்) ஆகியவற்றுடன் விளங்குகிறது. கருட மண்டபத்தின் தென்புறமாகவும் வடபுறமாகவும் அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டுகளின் வழியாக மகாமண்டபத்திற்குள் செல்லலாம். இதேபோன்று அர்த்தமண்டபத்திற்கும் மகாமண்டபத்திற்கும் இடையில் பக்கவாட்டில் கோயிலுக்குள் நுழைவதற்கு ஏதுவாக இரண்டு வாயில்கள் உள்ளன. இதுபோன்ற அமைப்புடைய வாயில்கள் சோழர் காலத்தில் தஞ்சாவூர், கங்கைகொண்டசோழபுரம் முதலிய இடங்களில் அமைந்த கோயில்களில் காணப்படுகின்றன. இவ்வமைப்பைப் பின்பற்றியே மதுரை கூடலழகர் பெருமாள் கோவிலும் கட்டப்பட்டுள்ளது. கருவறையின் உட்புறம் காளமேகப் பெருமாள் நின்ற நிலையிலும் தாயார் இருவரும் அமர்ந்த நிலையிலும் காட்சி தருகின்றனர்.

காளமேகப்பெருமாள் நின்ற கோலத்தில் விளங்கும் கருவறை சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையுள்ள விமானம் உயர்ந்த உபபீடத்துடன் (உபானம்) அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கீரிவம், சிகரம், ஸ்தூபி என்று ஆறு அங்கங்களையும் இரண்டு தளங்களையும் கொண்டு மிகுந்த வேலைப்பாடுகளுடன் அழகியதாகத் தோற்றமளிக்கிறது. அதிட்டானம் அதோபத்மத்துடன் போன்ற அழகிய வர்க்கவேறுபாடுகளால் அணி செய்யப்பட்டுள்ளது. கருவறைச் சுவர்களை நுட்பமான புனைவுடன் கூடிய தேவகோட்டங்கள், அரைத்தூண்கள், கும்பபஞ்சரங்கள் அலங்கரிக்கின்றன. இவ்விமானத்தின் சிகரம் சதுர வடிவில் அமைந்த நாகர சிகரமாகும். இவ்விமானத்தின் கலைப்பாணி விசயநகர வேந்தர் காலக் கட்டடப்பாணியில்

அமைந்திருக்கிறது. இது கி.பி. 16ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் திருத்திக் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்துகின்ற வகையில் மகாமண்டபத்தின் தென்புறத்து அடித்தளத்தில் கி.பி. 1551–ஆம் ஆண்டைச் சார்ந்த விசயநகரவேந்தர் காலக் கல்வெட்டுகள் இரண்டு பொறிக்கப்பட்டுள்ளன. (மதுரை கூடலழகர் பெருமாள் கோவில் விமானமும் இதே காலத்தில் எடுப்பிக்கப்பட்டுள்ளது).

கி.பி. 1551–ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் உள்ள மகாமண்டபமும் கருடமண்டபமும் இவ்விசயநகரவேந்தர் காலத்தில் கி.பி. 16 –ஆம் நூற்றாண்டிலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும். மகாமண்டபத்தின் உட்புறத்தினை விசயநகர வேந்தர்காலப் பாணியில் உருவான மிகப்பெரிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. தூண்களின் மீது அமர்ந்திருக்கும் சிம்மங்கள் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. இம்மண்டபத்தின் விதானத்திற்கு கீழே தூண்களுக்கு மேலே உள்ள சன்னல் சட்டங்களில் சிற்றுருவக் காட்சிகள் காணப்படுகின்றன. திருமாலின் பல அவதார நிலைகளையும் திருவிளையாடல்களையும் காட்டும் சிறு சிற்பங்கள் இங்கு உள்ளன.

*கருடமண்டபச் சிறபங்கள்*

மகாமண்டபத்தினை அடுத்துள்ள முன்மண்டபமாக விளங்கும் கருடமண்டபத்தில் கி.பி. 16ஆம் நூற்றாண்டு விசயநகரவேந்தர் காலத்துப் பெருந்தூண்களும் அவற்றில் ஆள் உயர அளவில் பெருஞ்சிற்பங்களும் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் மிகுந்த வேலைப்பாடும் அலங்காரமும் நிறைந்த உயர்ந்த கலைத்திறன் வாய்ந்த விசயநகரவேந்தர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

கருடமண்டபத்தின் தென்புறத் தூண் ஒன்றில் வடக்குநோக்கிய நிலையில் மன்மதனின் உருவம் காணப்படுகிறது. இடக்கரத்தில் கரும்பு வில்லும் வலக்கரத்தில் மலர்கணையும் ஏந்தி நின்றநிலையில் மன்மதன் காட்சியளிக்கின்றான். இவ்வுருவத்தின் எதிரே வடக்கிலுள்ள தூணில் மன்மதனை நோக்கி

அன்னப்பறவையில் அமர்ந்த நிலையில் இரதிதேவி காட்சியளிக்கின்றாள். தலையில் வலபுறமாக அலங்காரக் கொண்டையிட்டு, கண்ணைக்கவரும் அழகுமிக்க உடற்கட்டுடன், வலக்கரத்தில் மலரைக் கணையாக ஏந்தி அன்னத்தின் மீது விளங்குகின்றாள். இராமர்–சீதை, இலக்குவன், சிற்பங்கள் மண்டபத்தின் கீழ்புறமுள்ள தூண்களில் காளமேகப் பெருமாளை நோக்கி காணப்படுகின்றன. வலப்புறம் நிற்கும் சீதையை தன் வலக்கரத்தால் அணைத்துக் கொண்டு இடக்கரத்தில் வில்லேந்தி கம்பீரமாக நின்றநிலையில் இராமபிரானின் உருவம் திகழ்கிறது. அலைஅலையான மடிப்புடன் காட்டப்பட்டுள்ள மெல்லிய சீதாப் பிராட்டியின் இடை ஆடையும் ஆபரணங்களும் அலங்காரமும் அவளது எழிற்கோலத்திற்கு மேலும் அழகு சேர்க்கின்றன. சீத்தாராமனின் வடக்கேயுள்ள தூணில் வில்லை இடக்கரத்தில் பற்றி உறங்காவில்லியான இலக்குவன் நின்ற கோலத்தில் காணப்படுகின்றான். கருடமண்டபத்தின் நடுவே பெருமாளை வணங்கி நின்ற நிலையில் பெரிய திருவடியான கருடனின் உருவம் திகழ்கிறது.

காளமேகப் பெருமாள் விமானத்தைச் சுற்றியுள்ள திருச்சுற்றுச் சுவரினையொட்டி தூண்கள் தாங்கி நிற்கும் திருச்சுற்று நடைமாளிகை காணப்படுகிறது. இதன் தென்புறப் பகுதியில் ஸ்ரீதேவித் தாயாரின் கோயிலும் சக்கரத்தாழ்வார் கோயிலும் உள்ளன. ஆண்டாள் சன்னதி பெருமாளின் விமானத்திற்குத் தென்புறம் தனியாக உள்ளது. இதற்குக் கிழக்கே முதல் திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் நவநீதகிருஷ்ணன் சன்னதி காணப்படுகிறது. பரமபதவாசல் முதல் திருச்சுற்று திருமதிலின் வடபுறம் உள்ளது.

*சக்கரத்தாழ்வார் கோயில்*

இக்கோயிலுள்ள சக்கரத்தாழ்வார் பக்தர்கள் போற்றிக் கொண்டாடும் சக்திமிக்கவராக வணங்கி வரப்படுகின்றார். சக்கரத்தாழ்வார் என்றழைக்கப்படும் திருவாழி ஆழ்வாருக்குத் தனிச்சிற்றாலயம் எடுத்து வழிபடும் மரபு பிற்காலச்சோழர்,

பிற்காலப் பாண்டியர் காலங்களில் அதிகரித்திருக்கின்றது. இம்முறையில் திருமோகூர் கோயிலிலும் பிற்காலப் பாண்டியர் காலத்தில் கி.பி. 13 – ஆம் நூற்றாண்டில் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஏழாவது ஆட்சியாண்டில் சக்கரத்தாழ்வாருக்குத் தனிக்கோயில் ஒன்று காளமேகமான காங்கேயராயர் என்ற பாண்டிய அரசனின் அதிகாரியால் எடுக்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது. 6 இக்கோயில் இரண்டாம் திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் எடுக்கப்பட்டது. இது பற்றிய கல்வெட்டும் இவ்விடத்திலேயே திருமதிலில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் அழிவுற்ற நிலையில், தற்போது, இன்றுள்ள கோயிலின் முதல் திருச்சுற்றில், தென்மேற்கு மூலையில் மற்றொரு சக்கரத்தாழ்வார்கோயில் பிற்காலத்தில் கட்டப்பட்டு வழிபாட்டில் விளங்கி வருகிறது. பிற்காலப்பாண்டியர் காலத்தினைச் சார்ந்த பழமையான சக்கரத்தாழ்வார் கற்சிற்பம் மட்டும் இரண்டாம் திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் காட்சியளிக்கிறது. சதுரமான பலகைக்கல் ஒன்றில் ஒருபுறம் சுழற்சி நிலையில் பதினாறு கரங்களுடன் அவற்றில் பதினாறு வகை ஆயுதங்களை ஏந்தி சக்கரத்தாழ்வார் உருவம் திகழ்கிறது. இவ்வுருவத்தினைச் சுற்றி எண்திசைக் காவலர்கள் மற்றும் பல தெய்வங்களின் சிற்றுருவங்கள் காணப்படுகின்றன. சக்கரத்தாழ்வார் சிற்பமுள்ள பலகைக் கல்லின் பின்புறம் யோக நிலையில் அமர்ந்துள்ள நிலையில் உள்ள நரசிம்மரின் திருவுருவம் காட்சியளிக்கின்றது. இதேபோன்று ஆனால் சக்கரமும் மந்திர எழுத்துக்களும் உள்ள பிற்காலச் சக்கரத்தாழ்வாரின் உருவம் முதல் திருச்சுற்றில் தற்போது வழிபாட்டில் விளங்கிவரும் சக்கரத்தாழ்வார் கோயிலில் காணப்படுகிறது. இதுபோன்ற சக்கரத்தாழ்வார் உருவங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர், அழகர்கோயில், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் போன்ற திவ்யதேசங்களிலுள்ள கோயில்களில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. திருமோகூர் கோயிலில் தற்போது சக்கரத்தாழ்வார் வழிபாடு குறிப்பிடத்தக்க முறையில் வளர்ந்து நடந்து வந்து கொண்டிருக்கிறது.

*அனுமார்கோவில்*

இரண்டாம் திருச்சுற்றின் தென்கிழக்கு மூலையில் அழிந்தநிலையில் நாயக்கர்காலத்தில் எடுக்கப்பட்ட மண்டபம் ஒன்று காணப்படுகிறது. இதனையொட்டி மேற்கே வடக்கு நோக்கிய நிலையில் அனுமார்கோவில் உள்ளது. கருவறை அர்த்தமண்டபம் கொண்ட சிறிய விமானத்துடன் கூடிய கோயிலாக இது விளங்குகிறது.

*கம்பத்தடிமண்டபம்*

அனுமார்கோவிலுக்கு வடக்கே காளமேகப்பெருமாள் கோவிலில் நுழைந்தவுடன் காணப்படுவது கம்பத்தடி மண்டபமாகும். இது கி.பி. 17–18 ஆம் நூற்றாண்டு கலைப்பாணியில் விளங்குகிறது. இவற்றின் கீழ்ப்புறத்தில் உள்ள தூண்கள் பெரிய யாளியின் உருவங்களைக் கொண்டதாக விளங்குகின்றன. இங்குள்ள தூண்களில் பல தெய்வவுருவங்கள் காணப்படுகின்றன.

*மருதுபாண்டியர் உருவச் சிலைகள்*

சிவகங்கைச் சீமையில் ஆங்கிலேயரை எதிர்த்து வீரமரணம் அடைந்தவர்கள் பெரியமருது, சின்னமருது என்று அழைக்கப்பட்ட மருதுபாண்டியர்கள் ஆவார்கள். இவர்கள் தம்பகுதியில் இருந்த சைவ வைணவ கோயில்களில் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். அவற்றில் இறைவனை என்றும் வழிபட்டு நிற்கும் சதாசேவையாய் தங்கள் உருவச் சிலைகளைச் செய்து வைத்துள்ளனர். காளையார்கோவில், குன்றக்குடி போன்ற இடங்களிலுள்ள கோவில்களில் இவர்கள் உருவச் சிற்பங்கள் உள்ளன. காளையார்கோவிலுக்கு அடுத்த நிலையில் சிறப்பு வாய்ந்த மருதிருவர் உருவச் சிலைகள் திருமோகூர் கோயிலில் உள்ளன. திருமோகூர் காளமேகப் பெருமாள் கோவிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்து அறக்கொடைகளை மருதுபாண்டியர் அளித்துள்ளனர். இவர்களது ஆள்வுயர அழகிய உருவச் சிற்பங்கள் காளமேகப்பெருமாள் கோவில் கம்பத்தடி மண்டபத்து தூண்களில் பெருமாளை நோக்கி வணங்கி நின்ற நிலையில்

காட்சியளிக்கின்றன. இவ்வுருவங்களுக்குப் பக்கவாட்டில் இவர்களது அலுவலர்களது உருவங்களும் உள்ளன.

*பள்ளிகொண்ட பெருமாள் கோவில்*

கம்பத்தடி மண்டபத்திற்கு வடக்கே தெற்கு நோக்கிய நிலையில் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட பள்ளிகொண்ட பெருமாள் கோவில் காணப்படுகிறது. நம்மாழ்வார் திருமோகூர் பெருமாளைப் பற்றிப் பாடும்போது அவரை "படர்கொள் பாம்பணைப் பள்ளி கொள்வான் திருமோகூர்" என்று பாடியுள்ளார். இதனை நினைவில் கொண்டு பாண்டியர்கள் இக்கோயிலைத் திருமோகூரில் எடுத்திருக்க வேண்டும். இக்கோயிலின் கருவறை பிற்காலப் பாண்டியர் கலைப்பாணியில் தேவகோட்டங்களுடன் எளிமையாய் உருவாக்கபட்டுள்ளது. கருவறையின் பின்புறம் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. 7 இக்கோயிலின் விமானம் திருவரங்கம் பள்ளிகொண்ட பெருமாள்கோவில் போன்று சாலைவடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் கருவறையில் மேற்கே தலைவைத்து, கிழக்கே பாதங்களை நீட்டி, வடக்கே பின்புறம் காட்டி, தெற்கு நோக்கி முகம் சாய்த்து, கிடந்த கோலத்தில் திருமால் பேருருவ வடிவிலே காட்சி தருகின்றார். கல்லாலான இத்திருமேனி கி.பி.13 ஆம் நூற்றாண்டில் செய்விக்கப்பட்டதாகும். நீண்ட திண்டின் மீது நீள்முடியை வைத்து வலக்கரத்தினைத் தலைக்கு மேலே நீட்டி இடக்கரத்தினை உடம்பின் மீது வைத்து கிடந்த கோலத்தில் பள்ளிகொண்ட பெருமாளின் திருமேனி திகழ்கிறது. பெருமாளின்தலைக்கு மேலே ஐந்தலை அரவுக்குடை பிடித்த ஆதிசேடனின் பாம்பணை மீது பெருமாள் பள்ளிகொண்ட நிலையில் வடிக்கப்பட்டுள்ளார். பாம்பணை மூன்று மடிப்பாக விளங்குகிறது. அறிதுயிலில் கிடக்கும் பெருமாள் கண்திறந்தால் காணும் நிலையில் திருமகள், பூமகள் இருவரும் பள்ளிகொண்ட பெருமாளின் நீட்டிய பாதங்களுக்கு அருகே சிறு குழந்தைகள் அமர்ந்திருப்பது போல் காலை முன்புறம் நீட்டி அமர்ந்துள்ளனர்.

தங்கள் கரங்கள் இரண்டையும் பெருமானை நோக்கி நீட்டி கால்களுக்கு அருகில் வைத்து இறைஞ்சும் நிலையில் (பிரார்த்திக்கும் நிலை) காட்சியளிக்கின்றனர். இந்தியாவில் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் பாம்பணையில் பள்ளிகொண்ட பெருமானின் பழமையான உருவங்கள் உள்ளன. 8 இவற்றில் திருமோகூரில் இருப்பது போல் தேவியர் இருவரும் திருமாலைப் பிரார்த்திக்கும் நிலையில் உள்ள உருவங்கள் இல்லை. பொதுவாக இவற்றில் திருமகள் திருமாலின் பாதத்திற்கு அருகில் அமர்ந்து அவரது பாதங்களை மடியில் வைத்துக் கையால் வருடும் நிலையில் காட்சியளிப்பாள். இந்நிலைக்கு மாறாக திருமோகூரில் எங்கும் இல்லாத திருக்கோலத்தில் திருமகள் மட்டுமல்லாமல் பூமகளும் அமர்ந்து பள்ளிகொண்ட பெருமாளைப் பிரார்த்திக்கும் நிலையில் காட்சியளிக்கின்றாள். எம்பெருமானிடத்து அடியவரின் குறைகளைத் தாயாரின் மூலமாக எடுத்துக்கூறித் தீர்க்கும் ஸ்ரீவைணவத் தத்துவத்தின் சிறப்பை விளக்கும் திருக்கோலமாக திருமோகூர் பள்ளிகொண்ட பெருமாளின் திருக்கோலம் திகழ்கிறது. இவரை க்ஷிராப்திநாதர் (பாற்கடலில் பள்ளி கொண்ட நாதர்) என்று அழைத்து வழிபட்டு வருகின்றனர். இவரது சன்னதியின் பின்புறம் கோவிலுக்கு வடபுறம் உள்ள தாமரைக்குளம் இக்கோயிலின் திருக்குளமாக க்ஷிராப்தி புஷ்கரணி என்று பெயர் பெற்று விளங்கி வருகிறது. பாற்கடல் கடையும் போது அதிலிருந்து தோன்றிய துளி ஒன்று இதில் தெரித்து விழுந்ததாகத் தலபுராணம் கூறுகிறது.

பள்ளிகொண்ட பெருமாளின் கருவறைக்கு முன்பாக யானைகள் இழுத்துச் செல்லும் நிலையில், மேற்கிலும் தெற்கிலும் அமைந்த வாயிற்படிக்கட்டுகளைக் கொண்ட பெரியமண்டபம் ஒன்று நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. இதன் தெற்கு வாயிலில் உள்ள தூண்களில் இதனைக் கட்டியவரின் உருவச் சிலைகள் சிறிய அளவில் செய்விக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தினை அறுபதிற்கும் மேற்பட்ட தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்களில் பல அழகிய திருவுருவங்களும் ஆடல்காட்சிகளும் விலங்கின் உருவங்களும் வடிக்கப்பட்டுள்ளன.

திருவாய்மொழியில் 'தாளதாமரை' என்று தொடங்கும் பத்துப்பாடல்கள் மூலமாக நம்மாழ்வார் திருமோகூர் திருத்தலத்தின் பெருமையைப் பாடிப் பரவியுள்ளார். திருமோகூர் ஊரின் சிறப்பையும் அங்கு கொண்டகோயிலில் குடி கொண்டிருக்கும் பெருமாளின் அழகு, அருஞ்செயல், நற்கருணை ஆகியவற்றையும் எடுத்து மொழிகின்றார். வேறு கதி இல்லையென்று அவன் அடியினைச் சரண் அடைந்தவர்க்கு எல்லாமளிக்கும் இன்பனாகத் திகழ்வான் என்று கூறுகின்றார்.

திருமோகூர், அவர் காலத்தில் இருந்த நிலையினை அவர் பாடல்கள் நன்கு நமக்குக் காட்டுகின்றன. நான்கு வேதம் வல்ல நான்மறை வாணர்கள் இவ்வூரில் வாழ்ந்தார்கள். இவ்வூர் நீர்வளமும் நிலவளமும் நிறைந்ததாகத் திகழ்ந்தது. தாமரைத் தடாகமும் எட்டுத் திசைகளிலும் கரும்பும் செந்நெல்லும் விளைந்து கவின்பெரு வனப்புடன் உயர்ந்த சோலைகள், தன்பணை வயல்கள் சூழ்ந்து விளங்கிற்று என்று நம்மாழ்வார் பாடல் வரிகள் தெரிவிக்கின்றன.

*"தாளதாமரை தடம்அணிவயல் திருமோகூர்"*
*"நலங்கொள் நான்மறைவாணர் வாழ் திருமோகூர்"*
*"எண்திசையும் ஈன்கரும்போடு பெருஞ்செந்நெல்விளைய"*
*"வாய்த்த தண்பணை வயல் சூழ் திருமோகூர்"*
*"உயர்கொள்சோலை ஒண்தடமணிஒளி திருமோகூர்"*

இத்தகு சிறப்புவாய்ந்த திருமோகூரில் குடியிருக்கும் பெருமாளின் கோயிலை வலம்வந்து நம்மாழ்வாரின் மனம் களிப்பால் கூத்தாடியது. திருமோகூரைச் சுற்றி வலம் வந்தாலே நம்பிறவித் துயர் அழியும் எனவும் தமது பாடல்களில் ஆழ்வார் சுட்டிக் காட்டுகின்றார்.

நம்மாழ்வார் திருமோகூர் பெருமாளை அசுரரை அழிக்கும் தோள்கள், சுரிகுழல், மலர்க்கண்கள், பவளச்செவ்வாய் – கனிவாய், மணித்தடத்தடி ஆகியவற்றைப் பெற்று அமரர், முனிவர் ஆகிய

அனைவருக்கும் இன்பம் அளிப்பவன். வழியறியாது திகைக்கும் அடியவர்க்கு வழித்துணையாய் வரும் ஆப்தனாக (ஆத்தன்) விளங்குபவன். கருணை மழைபொழியும் காளமேகமாக இருப்பவன். எனவே தொண்டர்களே வேறு கதி இல்லையென்று நமது இடர் கெட அவன் அடி பரவுங்கள். நம் துயர் கெடும் என்று தம் அருட்பாசுரங்களில் கூறுகின்றார். மேலும் பாம்பணையின் மீது பள்ளிகொண்டிருப்பவன், மூவுலகையும் தமது வலிய காலால் அளந்தவன், அரக்கர்கள் அழிவதற்காகத் தசரதனுக்கு மகனாகப் பிறந்தவன். நமக்கு நல்ல அரணாக விளங்குபவன். அடியவர்களுக்கு வரும் துயரினைப் போக்குவதற்காக தான் விரும்பியபடி திருவுருவம் தாங்கிவரும் காமரூபனாக வடிவெடுத்து அதனைப் போக்குபவன் என்று பின்வரும் சொற்களால் பாராட்டிக் கூறுகிறார்.

*"காளமேகம்"*
*"நலங்கழல்வன்"*
*"ஆயிரம்பேருடையம்மான்"*
*"ஆத்தன்"*
*"சுடர்கொள்சோதி"*
*"குடமாடும் கூத்தன்"*
*"கோவலன்"*
*"வல்லசுரர்கள் கூற்றம்"*
*"ஏத்தும் நங்கட்கும் அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன்"*
*"உலகுசெய்வான்"*
*"நல்லரண்"*
*"படர்கொள் பாம்பணைப் பள்ளிகொள்வான்"*
*"அண்டம் மூவுலகளந்தவன்"*
*"வல்லரக்கர் புக்கழுந்தத் தயரதன் பெற்ற*
*மரகதமணித்தடம்"*
*"காமரூபம் கொண்டு எழுந்தருளிப்பான்"*

*<u>திருமங்கையாழ்வார் பாசுரம்</u>*

நம்மாழ்வாரை அடுத்து திருமங்கையாழ்வாரும்

இத்திருத்தலத்தை அழகர்கோயிலோடு இணைத்து தமது சிறிய திருமடலில் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

*"சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர்"*

*காளமேகப் புலவர் பாட்டு*

தமிழ்நாட்டில் நாயக்கர் காலத்தில் இரண்டு பொருள்பட சிலேடைக் கவிபாடுவதிலும் வசைப்பாடல் பாடுவதிலும் கொடிகட்டிப் பறந்த கவிஞர் காளமேகம் ஆவார். அவரது வாக்கிலும் திருமோகூர் காளமேகப் பெருமாள் வாழ்த்தப்பட்டுள்ளார். திருமோகூர்ப் பெருமாள் இரணியனை (பொன்னன்) அவனது மகனுக்காக கூரிய நகத்தால் வயிற்றைக் கீறி அழித்தார். இராவணனை (வாள்அரக்கன்) அமரர்க்காக அம்பால் தலையைக் கொய்தார். கௌரவர்களைப் (நூற்றுவரை) பாண்டவர்களுக்காகப் பாரதப்போரில் சங்கொலியால் போரில் வீழ்த்தினார். பாரிசாதச்சோலையைச் சத்தியபாமாவின் காதல் நட்பிற்காக கருடனால் கொண்டு வந்தார். வில்லை சீதைக்காக தன்தோள் வலியால் இறுத்தார். கத்தும்கடலை வழிக்காக வானரங்களைக் கொண்டு அடைந்தார் என்று காளமேகம் பாடியுள்ளார். தனது ஒரே பாடலில் திருமாலின் ஆறு அருட்செயல்களை அடக்கிக் காட்டியுள்ளார். நரசிம்ம அவதாரம், இராமஅவதாரம், கண்ணன் அவதாரம் எடுத்து பெருமாள் செய்த செயல்கள் காளமேகப் புலவரால் திருமோகூர் பெருமாளின் பெருமைகளாக அவரது தனிப்பாடல் ஒன்றில் எடுத்துக் கூறப்படுகின்றது.

*பொன்னனை வாள்அரக்கனை நூற்றுவரைக் காவைப்*
*பொருசிலையைக் கனைகடலைப் பொன்னன் ஈன்ற*
*நன்மகற்காய்ச் சுரர்க்காய் ஐவருக்காய்க் காதல்*
*நட்பினுக்காய்ச் சானகிக்காய் நடவைக்காக*
*மன்னுகிரால் வடிக்கணையால் வளையால் புள்ளால்*
*வயங்குதோள் வலியால் வானரங்களாலும்*
*முன்னுடல் கீறிச் சிரங்கொண்டு அமரில் முதலொடுங்*
*கொண்(டு) இறுத்தடைத்தான் மோகூரானே.*

## கல்வெட்டுகள்

திருமோகூர் காளமேகப்பெருமாள் கோயிலில் முழுமையான கல்வெட்டுக்களாகப் பதினொரு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. திருப்பணியின்போது இடம் மாற்றி வைத்துக் கட்டப்பட்ட அரைகுறையான பல துண்டுக் கல்வெட்டுகளும் இங்கு உள்ளன. இவை பெரும்பாலும் தமிழ்மொழியில் பண்டைய தமிழ் எழுத்துக்களில் உள்ளன. வடமொழி சொற்கள் அவற்றில் வரும்போது அவை கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. பிற்காலப்பாண்டிய மன்னர்கள் காலத்தினைச் சார்ந்த ஐந்து கல்வெட்டுகளும் விசயநகரவேந்தர் காலத்து இரண்டு கல்வெட்டுகளும் இக்கோயிலில் காணப்படுகின்றன. 9 இவை இக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் பூசைகள் ஆகியவற்றிற்காக அளித்த கொடைகள் பற்றித் தெரிவிக்கின்றன. சில கல்வெட்டுகள் சிற்றாலயமும் கோவில் கட்டடங்கள் கட்டுவித்ததையும் கூறுகின்றன.

*பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள்*

இங்குள்ள பிற்காலப்பாண்டியரின் ஐந்து கல்வெட்டுகளில் நான்கு இக்கோயிலின் வெளிச்சுற்றுச் சுவரின் தென்புறம் உட்பக்கத்திலும், ஒன்று பள்ளிகொண்ட பெருமாள் கோயில் கருவறையின் தென்புறத்திலும் காணப்படுகின்றன. இவை கி.பி. 13, 14–ஆம் நூற்றாண்டுகளில் பாண்டி நாட்டில் ஆட்சிபுரிந்த முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1251–1271), எம்மண்டலமும் கொண்டருளிய முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி.1268 – 1311) சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1304 – 1319) முதலிய மன்னர்கள் காலத்தைச் சார்ந்தவையாகும். இவை பாண்டியமன்னனின் அரச ஆணைகளாக விளங்குகின்றன. இக்கல்வெட்டுகளில் இக்கோயில் தென்பறப்புநாட்டு திருமோகூர் நின்றருளிய பரமசுவாமிகள் கோயில் என்று குறிப்பிடப்படுகிறது. இங்குள்ள பெருமாள் காளமேகப் பெருமாள் என்றும் அழைக்கப்படுகின்றார்.

கோமாறவர்மனான கோநேரின்மைகொண்டானின்

கல்வெட்டு இக்கோயில் ஸ்ரீவைணவர்களும் திரிதண்டி சன்னியாசிகளும் அறியும் முறையில் காளமேகப் பெருமாளுக்குத் திருப்பணிக்காகத் திருப்பணிப்புறம் என்ற பெயரில் வரி நீக்கி திருவிடையாட்டமாகச் செங்குடிநாட்டுச் சிறுகுன்றத்தூரைத் தானமாக அளித்ததைத் தெரிவிக்கிறது. இவ்வூர் தற்போது விருதுநகருக்கு அருகில் செங்குன்றாபுரம் என்ற பெயரில் வழங்கி வருகிறது.

திருபுவனச்சக்கரவர்த்திகள் கோநேரின்மைகொண்டான் என்று தொடங்கும் பிற்காலப்பாண்டியனின் கல்வெட்டு அவனது எட்டாவது ஆண்டு முதல் வெண்பில்நாட்டுப் பிரமதேயம் ஆலோடுபட்டான் பூமாரபவித்திரச் சதுர்வேதிமங்கலம் என்ற ஊர் திருமோகூர் பரமசுவாமிகள் கோயில் திருப்பணிக்குத் திருப்பணிப்புற திருவிடையாட்டமாக வரிகள் நீக்கி தானமாகத் தரப்பட்டதைத் தெரிவிக்கிறது. இவ்வூரிலிருந்து வரும் கடமை, அந்தராயம், பொன்வரி, வினியோகம், வாசல்பேறு, வெட்டிப்பாட்டம், பஞ்சுபீவி, தட்டார்பாட்டம், இடைவரி, ஏர்வரி, இனவரி, ஏரிமீன்பாட்டம் மற்றும் எப்பேர்பட்ட வரிகளும் நீக்கி தானம் அளிக்கப்பட்டது. இவ்வூரின் நான்கெல்லைகளிலும் பெருமாளின் சக்கரம் பொறித்த திருவாழிக்கற்கள் எல்லைக்கற்களாக நடப்பட்டன.

திரிபுவனச்சக்கரவர்த்திகள் கோநேரின்மைகொண்டான் என்று தொடங்கும் மற்றொரு பிற்காலப்பாண்டியரின் கல்வெட்டு திருமோகூர் பரமசுவாமிகள் கோயிலின் திருப்பணிக்குத் திருப்பணிப்புற திருவிடையாட்டமாகப் பாகனூர் கூற்றத்தில் உள்ள தேனூர், திருவேடகம் என்ற ஊர்களிலிருந்து பிரித்து உருவாக்கப்பட்ட வீரநாராயணச் சதுர்வேதிமங்கலமும் சாலை என்ற ஊரும் தரப்பட்டு அரச ஆணை வழங்கப்பட்டதை திருமோகூர்கோயில் திருப்பதி ஸ்ரீவைணவர்களுக்கும் திரிதண்டி சன்னயாசிகளுக்கும் தெரிவிக்கிறது. இவற்றிற்கு வாங்கும் வரிகள் நீக்கப்பட்டு நான்கு எல்லைகளிலும் திருவாழிகற்கள் நடப்பட்டன.

மாறவர்மன் எம்மண்டலமுங் கொண்டருளிய

குலசேகரபாண்டியனின் நாற்பதாவது ஆட்சியாண்டு (கி.பி.1308) கல்வெட்டு அரிய செய்தியைத் தருகின்றது. அக்காலத்தில் திருமோகூரைச் சார்ந்த துங்கவனத்தில் பிரம்மதீர்த்தக்கரையில் இருந்த வேதநாயகர் கோயில் சிதைவுற்றுக் கிடந்தது. அதனை அரசனின் பெயரால் சுந்தரபாண்டியன் சோழக்கோனார் என்ற அதிகாரி திருத்திக்கட்டி வேதநாதரை எழுந்தருளுவித்தார் என்று இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. வேதநாதர்கோயில் திருமோகூரைச் சார்ந்திருந்த துங்கவனத்தில் இருந்தது என்பதை இக்கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. மேலும் இத்துங்கவனத்தினைச் சார்ந்த பிரம்மதீர்த்தக் கரையில் (ஆனைமலையை ஒட்டியுள்ள கொடிக்குளம் பகுதியில்) பெருமாள் வேதநாதருக்குக் கோயில் எடுப்பிக்கப்பட்டதையும் அறியமுடிகிறது. இன்றும் கொடிக்குளம் பெருமாள் கோவில் திருமோகூர்க் கோயிலைச் சார்ந்த நிர்வாகத்தில் விளங்கி வருகிறது. இக்கோயில் வேதநாதருக்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நித்தநிவந்தங்களுக்காகவும் திருநந்தவனம் செய்கின்ற ஸ்ரீவைணவர்களுக்கு கொற்றிலக்கையாகவும் (கூலியாள்) தென்பறப்பு நாட்டு பன்னாட்டான் கோட்டை, முக்குளம் முதலிய ஊர்கள் வரி நீக்கி இறையிலியாகத் திருவிடையாட்டமாக அளிக்கப்பட்டன.

காளமேகப்பெருமாள் கோயிலின் வெளித்திருச்சுற்றின் தென்மேற்கு மூலையிலுள்ள சடையவர்மன் சுந்தரபாண்டியனின் எட்டாவது ஆட்சியாண்டு கல்வெட்டு அப்பகுதியில் முன்பு இருந்த திருவாழி ஆழ்வார்கோவிலை காளமேகம் என்று பெயர் கொண்ட காங்கேயராயர் என்ற அரசனது அதிகாரி எடுப்பித்ததைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு வாசகம் முழுமையும் அறியமுடியாமல் பொறிந்துபோய் உள்ளது. ஆனால் திருவாழி ஆழ்வார் கோயிலுக்கு இப்பகுதியில் இருந்த படைப்பற்று ஊர் ஒன்று தானமாக வரிநீக்கித் தரப்பட்டிருப்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

பள்ளிகொண்ட பெருமாள் சன்னதிக்குப் பின்புறமுள்ள பாண்டியர் கல்வெட்டு பெருமாளே ஆணை வழங்கி அக்கோயிலில் பணிசெய்யும் பகவர்களுக்கும்

கோவணர்களுக்கும் தானம் வழங்கிச் சிறப்பித்ததாகக் கூறுகிறது. பெருமாள் மார்கழிக் கல்யாணத்திற்குப் புறப்படுகின்ற நாளிலும் கல்யாணங்களில் வேட்டைக்குப் புறப்படுகின்றபோதும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து பெருமாளுக்குப் படைக்கப்பட்ட திருவமுதத்தினைப் பெற்றுக் கொள்ள நிவந்தம் அளிக்கப்பட்டது. அதற்காக குந்தவைச்சதுர்வேதிமங்கலம் என்ற ஊர் தானமாக வழங்கப்பட்டது. அவ்வூரிலிருந்து வரும் வருமானத்தை அவ்வூர் பிராமணர்கள் எம்பெருமான் வீட்டுக்காரியங்கள் செய்கின்றபகவர்களுக்கும் கோவணவர் களுக்கும் நிவந்தமாக அளிக்க வேண்டும் என்று பெருமானால் ஆணை பிறப்பிக்கப்பட்டதை இக்கல்வெட்டு கூறுகிறது.

இக்கல்வெட்டுகள் தவிர இத்திருக்கோயில் திருச்சுற்றுச் சுவர்களில் பிற்காலப் பாண்டியர்காலத் துண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று நாச்சியார் பகவதியாழ்வாருக்கு "குலசேகரன் திருநந்தவனம்" என்ற நந்தவனம் ஒன்று செய்விக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

<u>*விசயநகரவேந்தர்காலக் கல்வெட்டுகள்*</u>

கி.பி.16 – ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் விசயநகரவேந்தராகத் திகழ்ந்தவர் வீரப்பிரதாப சதாசிவராயர் ஆவார். இவரது காலத்தில் விசயநகர வேந்தரின் தட்சிண மண்டலாதிபதியாக இராமராச விட்டலதேவ மகாராயர் விளங்கினார். அவர்காலத்தில் வசவணநாயக்கரும் அவர் மகன் திம்மப்பநாயக்கரும் விட்டலதேவ மகாராயரின் அதிகாரிகளாகத் திகழ்ந்தனர். இவர்கள் தங்கள் காலத்தில் மதுரைப் பகுதியில் பல கோயில்களைத் திருத்திக்கட்டி அறக்கொடைகளும் அளித்திருக்கின்றனர். வஸவணர்நாயகத்தில் திம்மப்பநாயகருக்கு அளித்த அரசன் திருமுகப்படி திருமோகூர் காளமேகப் பெருமாளுக்கும் பள்ளிகொண்ட பெருமாளுக்கும் மதுரை மண்டலச் சீர்மையிலுள்ள களவேள்விநாட்டைச் சார்ந்த மானகுழியும் அதனைச் சார்ந்த கிராமப் பகுதிகளும் கி.பி. 1551–ஆம் ஆண்டு அளிக்கப்பட்டுள்ளன. இதனைத் தெரிவிக்கும் கி.பி. 1551–ஆம் ஆண்டு இரண்டு கல்வெட்டுகள் திருமோகூர்

கோயிலில் காளமேகப்பெருமாள் சன்னதியில் மகாமண்டபத் தெற்குப்பகுதியில் அதிட்டானப்படையில் காணப்படுகின்றன. ஒரே செய்தியைக் கூறும் இவ்விருகல்வெட்டுகளில் ஒன்று அரசனது ஆணையாக நிலக்கொடை அளித்ததைத் தெரிவிக்கிறது. மற்றொரு கல்வெட்டு அதே நிலக்கொடையை காளமேகப் பெருமாளே வழங்கிய ஆண்டவனது ஆணையாக உள்ளது. இக்கல்வெட்டு காளமேகப்பெருமாள் கொண்டகோயிலில் சதுர்முகப்பீடத்தில் அவரது தேவியரோடு வீற்றிருந்தபோது அவரது கோயிலில் பணிசெய்யும் குடவர். கோவர், பூவிடுவார், தளையிடுவார், அணுக்கர், கணக்கர், காரியத்துக்குக் கடவார் ஆகிய அனைவரும் பெருமாளிடத்து முறையிடவே அதன்படி திம்மப்பநாயக்கர் அளித்த திருடையாட்டமாகக் கிராமங்கள் பெருமாளாலும் உறுதி செய்யப்பட்டு ஆணை வழங்கியதாகக் கூறுகிறது.

கி.பி.1551–ஆம் ஆண்டைச் சார்ந்த இவ்விரு கல்வெட்டுகளும் காளமேகப்பெருமாளுக்கும் பள்ளிகொண்ட பெருமாளுக்கும் நித்திய நைவேந்தியங்களுக்காகவும் திருவாராதனைகளுக்காகவும் மானகுழி கிராமப்பகுதிகள் திருவிடையாட்டமாக அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றன. இதன்படி இக்கிராமப் பகுதிகளிலிருந்து வரும் கலிபொன் முப்பத்தாறும் எட்டுப்படி மரக்காலால் நெல் நானுற்றைம்பதின்கலமும் திருமோகூர் கோயிலுக்குத் தானமாகத் தரப்பட்டன. திம்மப்பநாயக்கர் காலை சந்தியில் தத்தியோதன (தயிரமுது) அவசரத்துக்கு மேலே இரண்டாம் அவசரமாக தம் பெயரால் கட்டளையிட்டுச் செய்தார். இந்த அவசரத்துக்கு நாள் ஒன்றுக்கு அவசரம் ஒன்றுக்கு தூணிப்பதக்கும் அமுதுபடிக்கு கலனேமுக்குறுணி நெல்லும் அளிக்கப்பட்டது. நைவேத்திய கட்டளைக்கு தயிரமுது, நெய்யமுது, ஸம்பாரம், கறியமுது, எரிதுரும்பு திருப்பனாஞ்சமைப்பார்கூலி மற்றும் எப்பேர்ப்பட்ட செலவுகளுக்கும் இத்தானம் தரப்பட்டது. மேலும் காணியாட்சியாக அமுதுபடிச்சோற்றில் பிரசாதமும் திருமோகூர் மாடத் திருவீதியில் மனையும் கொடுக்கப்பட்டதைத் திம்மப்பநாயக்கர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

திருமோகூர் கோயிலின் பெரியமதிலின் தென்கிழக்கு மூலையில் வெளிப்புறச் சுவரில் கி.பி.1700 – ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று உள்ளது. இது மதுரைநாயக்க மன்னரின் தளவாய் நரசப்பய்யன் குமாரர் வேங்கப்பய்யன் தனது தந்தையின் அனுமதியின் பேரில் வெளிப்புறத் திருமதில் கட்டித் திருப்பணி செய்ததைக் கூறுகிறது. இத்திருப்பணியை அவருடன் பழனியப்பன் என்பவரும் சேர்ந்து செய்துள்ளார்.

திருமோகூர் கோயிலுக்குக் கிழக்கில் தேரடிக்கு மேற்கில் பதினெட்டாம்படி கருப்பணசாமிகோவில், வீரபத்திரர்கோவில், ராக்காயம்மன் கோவில், இருளப்பசாமி கோவில், வரதவிநாயகர் கோவில் முதலிய கோயில்கள் உள்ளன. திருமோகூருக்கு மேற்கேயுள்ள யானைமலை அடிவாரத்தில் திருமோகூர் காளமேகப் பெருமாள் கோயிலின் ஆளுகையின்கீழ் அமைந்த நரசிங்கம் அருள்மிகு நரசிங்கப்பெருமாள் கோவில், கொடிக்குளம் அருள்மிகு வேதநாராயணப்பெருமாள் கோவில் ஆகியவை உள்ளன.

அடிக்குறிப்புகள் :

1. மதுரைக்காஞ்சி அடி.507–510; பதிற்றுப்பத்து.பா.44அடி 10–17 பா.49.அடி4–9. அகநானூறு.பா.251.அடி.7–13.
2. சிலப்பதிகாரம், நீர்ப்படைகாதை, அடி124–126.
3. ந.சுப்புரெட்டியார், பாண்டிநாட்டுத் திருப்பதிகள், சென்னை 1990, பக்.89–90
4. இக்கல்வெட்டு களஆய்வில் கண்டறியப்பட்டு படிக்கப்பட்டது.
5. ARE.No.455/1906
6. ARE.No.330/1918
7. ARE.No.334/1918
8. Ratan Parimoo, Sculptures of Sesasayi Vishnu, Baroda, 1983.
9. இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கையில் திருமோகூர்

கல்வெட்டுகளின் சுருக்கம் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. இவை அனைத்தும் களஆய்வில் நேரில் படிக்கப் பெற்று இந்நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாசகம் இதுவரை வெளிவரவில்லை. சில புதியதாகக் கண்டறியப்பட்ட கல்வெட்டுகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. கொடிமங்கலத்திலுள்ள கல்வெட்டும் நேரில் சென்று படிக்கப்பட்டது. இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கையில் திருமோகூர் கல்வெட்டுகள் கீழ்க்கண்ட எண்களில் வெளியிடப்பட்டுள்ளன. ARE.Nos. 329 to 334 / 1918; ARE. 76 / 1905.

*மாத, ஆண்டு திருநாட்கள்*

மாதம் தோறும் திருவோணப் புறப்பாடு, ஆழ்வார், ஆசாரியர் திருநட்சத்திரம் திருநாள், வைகாசிமாதம் பத்து தினங்கள் கொடியேற்றிதேரோட்டம், தீர்த்தவாரி திருநாட்கள் நடைபெறுகின்றன. ஆனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் சக்கரத்தாழ்வார் திருநட்சத்திரத்தை முன்னிட்டு சுதர்சன ஹோமம் நடைபெறும்..

ஆனி மீ முப்பழ திருநாள்
ஆடி மீ திருவாடிப்பூரம், ஸ்ரீ ஆண்டாள் திருநாள்
ஆவணி மீ திருப்பவித்ரத் திருநாள்
புரட்டாசி மீ நவராத்திரித் திருநாள்
ஐப்பசி மீ மூலவருக்குத் தீபாவளியன்று தைலக்காப்பு சாத்தல்
கார்த்திகை மீ தீபத்திருநாள், கௌசித புராண படலத் திருநாள்
அத்யயனத் திருவிழா
மார்கழி மீ வைகுண்ட ஏகாதசித் திருநாள்
நம்மாழ்வார் சாற்றுமுறை
மாசி மீ கஜேந்திரமோட்சத் திருநாள், காளமேகப்பெருமாள்
யானைமலைக்குப் பல்லக்கில் கள்ளர்
திருக்கோலத்துடன் வழிநடையில் பல
மண்டகப்படி கண்டருளி நரசிங்கப் பெருமாள்
சந்நிதி அடைதல், மோகன அவதாரத்துடன்
எண்ணைக்காப்பு சார்த்தல், திருமஞ்சனமானவுடன்

| | |
|---|---|
| | கருட வாகனத்தில் எழுந்தருளி கஜேந்திர மோட்சபுராணம் வாசித்து யானைக்கு அருளல். திருமோகூருக்குக் கருடவாகனத்தில் சேவை சாதித்து எழுந்தருளல். |
| பங்குனி மீ | ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள், மோகனவல்லித் தாயார்களுடன் தாயார் சந்நிதிக்கு பெருமாள் எழுந்தருளி பங்குனித் திருநாளில் திருக்கல்யாணப் பெருந்திருநாள், இரவு புஷ்பப் பல்லக்கு. |

இக்கோயிலுக்குச் செல்லும் பேருந்துகள் 712, 716, 718. சனிக்கிழமை மற்றும் விசேட தினங்களில் தனிப் பேருந்து வசதி உண்டு.

*<u>காளமேகப் பெருமாள் கோயில் கல்வெட்டுகள்</u>*

**1. தென்புறத்திருமதில் உட்புறச்சுவரில் உள்ளது**

1. துல்யம் ஸ்ரீ மற்கீர்த்திக்குமேல் ஸ்வஸ்திஸ்ரீ கோமாறவன்மரான திரிபுவவநச் சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் தென்பறப்புநாட்டுத் திருமோகூர் நின்றருளிய பரமஸ்வாமிகள் கோயில் திருப்பதி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு திரிதண்டி

2. ஸந்நியாஸிகளுக்கும் காளமேகத்துக்குத் திருப்பணிப்புற திருவுடையாட்டமாகச் செங்குடிநாட்டுச் சிறுகுன்றத்தூர் பெருநான்கெல்லைக்கு உட்பட்ட நீர்நிலமுந் கருஞ்செய் புன்செயும் குளமுங்குளப்பரிப்பும் ஏம்பல்களும் நத்தமும்

3. நத்தபாரும் தோட்டமும் தோட்டகூறும் மரங்களும் கிணறுகளும் மற்றும் எப்பேர்ப்பட்ட ஸமப்தப்ராப்திகளும் உட்படத் திருப்பணிப்புறத் திருவுடையாட்ட இறையிலியாகக் குடுத்த...

**2. தென்புறத்திருமதில் உட்புறம் உள்ளது**

1. ஸ்ரீமற்கீர்த்திக்கு மேல்

2. ஸ்ரீகோச்சடையவன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் கோநேரின்மை கொண்டான் தென்பறப்புநாட்டுத்

திருமோகூர் நின்றருளிய பரமஸ்வாமிகள் கோயில் திருப்பதி

3. ஸ்ரீவயிஷ்ணவர்களுக்கும் திரிதண்டி ஸந்நியாஸிகளில் இராமானுஜஜீயற்கும் தங்களூர் ஸ்ரீதுவங்கவனத்தில் பிரம்மதீத்தகரையில் முன்னாள் இறங்கிக் கிடந்து நம் பேரால் சுந்தரபாண்டி

4.சோழகோனார் எழுந்தருளுவித்த நாயனார் வேதநாதற்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நித்தநிவந்தங்களுக்கும் திருநந்தவனம் செய்கிற ஸ்ரீவயிஷ்ணவர்களுக்குக் கொற்றிலக்கை

5. குமாக இந்நாட்டுப் பன்னாட்டான்கோட்டையும் முக்குளம் இந்நாயனார் திருநாமத்தாலே இவ்வூர் வாய்க்காலிலே கொண்ட குளத்துக்கு நான்கெல்லைக்கு உட்பட்ட நீர்நிலமுங்

6. கருஞ்செய் புன்செயும் நத்தமும் நத்தப்பாரும் தோட்டமும் தோட்டக் கூறுங் குளமுந் குளப்பரிப்பும் மேணோக்கின மரங்களுங் கீழ்நோக்கின கிணறுகளும் மற்றும் இத்தால்

7. வந்த சமப்தப்பிராப்திகளும் உட்பட காராண்மை திருவுடையாட்ட இறையிலியாக குடுத்து இவ்வூர்க்கு வருங்கடமை வினியோகம் பொன்வரி அந்தராயம் காரியவாராட்சி பஞ்

8. சுபீலி சந்துவிக்ரகப்பேறும் வாசல்பேறும் இலாஞ்சினைப்பேறு தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார்பாட்டம் இடைவரி இனவரி ஏர்வரி ஏரிமீன்பாட்டம் மற்றும் இத்தால் வந்த

9. ஸமப்தப்ராப்திகளும் உட்பட இந்நாயனார்க்கு முதலடங்கக் காராண்மை திருவிடையாட்ட இறையிலியாகக் குடுத்து நம்வரியிலார் கணக்கிலும் கழிப்பதாகச் சொன்னோம் இப்படிக்கு

10. இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவற் செல்வதாக கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக்கொண்டு இவ்வூர் நான்கெல்லையிலும் திருவாழிக்கல்லும் நாட்டி

11. கொள்ளவும் பாற்க ஸ்ரீமற்கீத்திக்கு மேல் ஸ்ரீகோமாறவன்மரான திரிபுவனச்சக்ரவத்திகள் எம்மண்டலமுங்கொண்டருளிய ஸ்ரீகுலசேகர தேவற்குயாண்டு 40வது நாள் 131

3.தென்புறத் திருமதில் உட்பக்கச்சுவரில் உள்ளது :

1. துல்யம் ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்தி கோநேரின்மை கொண்டான் தென்பறப்புநாட்டுத் திருமோகூர் நின்றருளிய பரமஸ்வாமிகள் கோயில் திருப்பதி

2. ஸ்ரீவயிஷ்ணவர்களுக்கும் திரிதண்டி ஸந்நியாஸிகளுக்கும் இந்நாயனார்க்குத் திருப்பணிபுற திருவுடையாட்டமாக பாகனூர் கூற்றத்து தேனூர் திருவேடகத்தில் வேறு பிரிந்த

3. வீரநாராயணச்சதுர்வேதி மங்கலமும் சாலை உள்ளிட்ட பற்றும் எட்டாவது பசானம் முதல் திருப்பணிபுறத் திருவுடையாட்டமாகப் பண்டுடை யாரும் பழங்காணியாள

4. ரும் தவிர்ந்து முதலடங்க இறையிலியாகக் குடுத்து இவ்வூர்களுக்கு வருங் கடமை அந்தராயம் பொன்வரி வினியோகம் வாசல்பேறு இலாஞ்சினைபேறு வெட்டிபாட்டம்

5. பஞ்சுபீலி சந்திவிக்கிரகப்பேறு காரியவாராட்சி தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார்பாட்டம் ஏர்வரி இடைவரி இனவரி ஏரிமின்பாட்டம் மற்றும் எப்பேற்பட்டன உப

6. ாதிகளுந் தவிர்ந்து இந்நாள்முதலுக்கு நம்வரியிலார் கணக்கிலுங் கழிப்பதாகச் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு இவ்வூர்க்கு நான்கெ

7. லையிலுந் திருவாழிக் கல்லும் நாட்டிக்கொண்டு சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலு(ஞ்செம்பிலு)ம் வெட்டிக் கொண்டு திருப்பணி செய்து போதுக

8. இவை நெட்டுருடையானெழுத்து யாண்டு எட்டுநாள் உள அயள–இவை சுந்தரபாண்டி... ங்கியராயனெருத்து உ..ல ஸ்ரீமற்கீர்த்திகு மேல்

<u>4. தென்புறத் திருமதில் உட்புறச்சுவரில் உள்ளது :</u>

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் கோநெரின்மை கொண்டான் தென்பறப்பு நாட்டுத் திருமோகூர் நின்றருளிய பரமஸ்வாமிகள் கோயில் திருப்பதிஸ்ரீவயிஷ்ணவர்களும் திரிதண்,

2. டிஸந்நியாஸிகளுக்கும் இந்நாயனார்க்கு திருப்பணிபுறத் திருவிடையாட்டமாக வெண்பில்நாட்டு பிரமதேயம் ஆலோடுபட்டான் பூமாரபவித்திரச் சதுர்வேதிமங்கலம் எட்டாவது

3. பசானம் முதல் திருப்பணிபுறதிருவுடையாட்டமாக பண்டுடையாரும் பழந்தேவதானமும் தவிர்ந்து முதலடங்க இறையிலியாகக் குடுத்து இவ்வூர்க்கு வருங் கடமை அந்தராயம் பொன்

4. வரி வினியோகம் வாசல்பேறு வெட்டிபாட்டம் பஞ்சுபீலி சந்திவிக்கிரகப்பேறு காரியவாராட்சி தறியிறை செக்கிறை தட்டார்பட்டம் இடைவரி ஏர்வரி இனவரி ஏரிமின்பா

5. ட்டம் மற்றும் எப்பேற்பட்ட பல உபாதிகளும் தவிர்ந்து இன்னாள் முதல் நம் வரியிலார் கணக்கிலும் கழிப்பதாகச் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாக கொண்டு இவ்வூர்

6.நான்கெல்லையிலுந் திருவாழிக் கல்லும் நாட்டிக் கொண்டு சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொண்டு திருப்பணி செய்து போதுக இவை நெட்டுருடையான் னெழுத்து

5. தென்புறத் திருமதில் உட்புறச்சுவரில் உள்ளது :

1. ஸ்வஸ்திஸ்ரீ மெற்கீர்த்திக்கு மேல் ஸ்ரீகோச்சடை(ய) வன்மரான திரிபுவனவனச்சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டியதேவற்கு யாண்டு, ஏழாவதி

2. ன்எதிராமாண்டு வைகாசிமாதம் இருப்தொன்றாந்தியதி தென்பறப்பு நாட்டு திருமோகூர் நின்றருளிய பரமஸ்வாமி...

3. காளமேகமான காங்கேயர் எழுந்தருளிவித்த ஆழ்வார் திருவாழி ஆழ்வார்கோவில் ஸ்ரீசேனாபதி... னைய...

4. காரணவர்க்குச் சமைந்த ஊரோமும் மதத.... படையும் படைக்காரணவர்க்குச் சமைந்த ஊரோடும்....

5. இந்நாட்டு உடையார்...

6. ப்பிடிவழுந்தானுக்கு.... க்கும்.... குடிசூழெல்லைக்கு கீழே... மேற்கு....

7. நீர்நக்கிக்கு .... மேலேல்லை படாரியேம்பல் எல்லைக்கு கிழக்கு வடஎல்லை உ. தலதிப்ப....

8. ... இசைந்த பெருநான்கெல்லைக்குட்பட்ட குளமும் குளபரிப்பும் ..... நத்தமும் நத்தபாரும் நன்செய்புன்செய்யும்....

9. கன் கிணறும் மற்றும் தெற்றியும் உடும்போடியும் ஆமைதவழ்வழியும்.... படுதுறையும்....

10. ஸமப்தப்ராப்திகளும் இவ்..... இவர்களுக்கு

11. உரியிலும் பரியிலும் குழிந்து இவ்வேணாடுடையார்க்கு....

12. வர்க்கு இவர் வற்க்கத்தார்களும் சந்திராவதித்தவற் செல்வதாக பிராமணம் பிடிபாடாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்துக் கொள்க.....

13. குடிப் படையும் படைக்காரணவர்க்கும் சமைந்த ஊரோமும் மத்தத்து... காரணவர்க்குச்சமைந்த....

14. இப்படிக்கு நரலோக விழுப்பரையன் தற்குறிக்கும் துங்க முத்தரையன்.... காண்டபேரையன் தற்குறிக்கும்....

<u>6. பள்ளிகொண்ட பெருமாள் கோவில்-தென்புற அதிட்டானப்படையில் உள்ளது.</u>

1............................... நங்குந்தவைச்சதுர்வேதிமங்கலத்து (கெப்) பாப்பாற்கு மார்கழிக்கண்ணாலதுக்குப் புறப்பட்டு நடையநிலே நிற்க தாங்கள் நம் வீடுநோ

2. க்கிச்செய்த நன்னடைகளுக்கு நடையனுக்கு வேண்டுவனவுக்கு தாங்கள் செய்யக்கடவார்களாகவும் சொன்னபடியும் வீட்டுக்காரியஞ் செய்கிற பகவர்களில் அரட்டுமுக்கிதாஸனும் கோவணவர்களும் சொன்னமையில் நடையனுக்கு வேண்டுவன செய்யக் கடவராகவுஞ் சொல்லி ந

3. டையனிலிருந்து நாமுண்ட கலமிவர்களுக்கே குடுக்க கடவார்களாகவும் கண்ணாலங்களில் வேட்டைக்குப் புறப்பட்டால் முன்பு பெறும்படிகளிலே நாமுண்ட கலமுட்படக் குடுக்க கடவாராகச் சொன்னோ மிப்படி கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்துக் கொள்க அருளால் திருமந்திரவோலை எழுத்து தி

4. ருக்காளமேக நல்லூருடையான் (மனத்துளா) திருவுடையா.... ராயணன் தாஸநெழுத்து உ எழுத்து.......

5. திருநாள் நடையினிலே யெழுந்தருளி நிற்க.......

6. ந்ருளினால் அமுது செய்தருளின.......

7. வேண்டுவென குறைவற...... கைம்மாலெ த

7. *காளமேகப் பெருமாள் கோவில் மகாமண்டபம், தென்புறச்சுவர் :*

1.ஏகத்து சுராசுராதீச மௌலிமாலா விபூஷிதம் ஸ்ரீமகோபூரநாதஸ்ய.......சாஸனம் ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1473 மேல்செல்லாநின்ற விரோதிகிருது ஸ்ம்வக்ஸரத்து உத்தராயணத்து ஹேமந்தருதுவில் மகர நாயற்று பூர்வபட்சத்து த்விதியையும் பௌமவாரமும் ஸ்ரீபரணிநட்சத்திரமும் சித்தயோகமும் கௌலவகரணமும் பெற்ற மகர ஸம்கிரமண புண்ணிய காலத்தில் பெருமாள் காளமேகம் பள்ளிகொண்டபெருமாள் ஸ்ரீஸம்காரகாரியத்து கடவரோம் ஸ்தாரந சமயத்தில் உள்ளவர்களோம் வஸவணநாயகத்தில் திம்மப்பனாயக்கற்கு பெருமாள் திருவுளமும் பற்றின திருமுகப்படிக்கு கொடுத்த ஸமரந விநியோகவுபயம்

2. முன்னாள்தாம் பெருமாள் காளமேகம் பள்ளிகொண்ட பெருமாளுக்கு நித்தியநைவேத்தியம் காலஸந்தியில் தத்யோதநம் அவஸரத்துக்கு மேல் இரண்டாம் அவஸரம் உம்முடைய பேரால் கட்டளை இட்டு இந்த அவஸரத்துக்கு திருவுடைஆட்டமாக விட்ட கிராமங்களாவன மதுரை மண்டலத்துச் சீர்மையில் கலவேழ்விநாட்டு நாலுகோட்டை சீர்மையில் திருவுடை ஆட்டமாக பெருமாளுக்கு..... குழிமான குழி கிராமங்களும் இதுக்கு உள்ளபட்ட னான்கெல்லைக்கும் உள்பட்ட ஏந்தல்களும் உள்ளிட்ட நஞ்சைபுஞ்சை நத்தம் படுகை மாவடை மரவடை குடிக்கடமை கறவைக்காணிக்கை

3.தறிக்கடமை பள்வரி பாசிவிலை மற்றும் நாளதுவரையும் நடந்து வருகிற ஸமஸ்தப்ராப்தியும் உள்பட பொன் முதல் கலிபொன் முப்பத்தாறும் நெல்முதல் எட்டுபடிக்காலால் நெல்லு னானூற்று அன்பதின் கலம் இந்தப் பொன்னுக்கும் நெல்லுக்கும் இவர் பெருமாளுக்கு நித்திய நைவேத்தியம் கால ஸந்தியில் தத்தியோதன அவஸரத்துக்கு மேல்

இரண்டாம் அவஸரம் இவர் பேரால் கட்டளையிடுகையில் நாள் ஒன்றுக்கு அவஸரம் ஒன்றுக்கு தூணிப்பதற்கு அமுதுபடிக்கு கலனேமுக்குறுனி நெல்லாகவும் இந்த நைவேத்தியத்துக்கும் மேல் வெச்சதுக்கு கறிஅமுது ஸமபாரம் திப்பனாஞ்சனம் சமைப்பார் கூலி உள்பட பலசிலவுக்கு இருபணம் ஆகவும் ஆக இந்த வகையில் வருஷம் ஒன்றுக்கு கூடின

4. நெல்லு னானூற்றமைபதிங்கலத்துக்கும் பொன்முப்பத்தார்கும் இந்தப்படி கட்டளை இட்டு திருவுடையாட்டமாக இந்த கிராமங்கள் இவர் பெருமாளுக்கு ஸமவித்தபடியினாலே இவருக்கு பெருமாள் காணி ஆட்சியாக திருவுளம் பற்றின படி தினசிலவுக்கு பெருமாள் அமுதுசெய்த பிராஸதத்தில் காலஸந்தியில் இரண்டாம் அவசரத்தில் துணிப்பதக்கு அமுதுபடி பிரசாதத்தில் இவருக்குனாலியில் ஒன்றுக்கு அமுதுப்படியே விட்டவன் விழுக்காடு குறுணிநானாழி பிரஸாதமும் பெருமாள் மாடைத்திருவீதியில் இருமனையும் பெருமாள் திருவுள்ளம் புத்திர பௌத்திர பாரம்பரியாக தாநாதி விநிமய விக்கிரயங்களுக்கும்.... கொள்ளவும் இம்மருவாதிக்கு நாங்களே நடத்திவரக் கடவோமாகவும்

*<u>8. காளமேகப் பெருமாள்கோவில் மகாமண்டபம் தென்புறச்சுவர்.</u>*

1. ஸ்வஸ்திஸ்ரீசகாப்தம் 1473 மேல் செல்லாநின்ற விரோதிகிருது சம்வக்ஸரத்து உத்திராயணத்து ஹேமந்தருதுவில் மகரநாயிற்று பூர்வபக்ஷத் த்விதியையும் பௌமவாரமும் ஸ்ரீபரணிநட்சத்திரமும் சித்தயோகமும் கௌலவகரணமும் பெற்ற மகரஸம்கிரணமன புண்ணிய காலத்தில் நம் கொண்டகோவிலில் சதுர்முகப்பீடத்தில் நாமும் நம்பெண்டுகளும் ஒலக்கமாக இருக்கையில் நம் வீட்டில் குடவர் கோவர் பூவிடுவார் தளைஇடுவார் அணுக்கர் கணக்கர் காரியத்துக்குக் கடவார் எல்லாரும் வந்து

நமக்குச் சொல்லுகையில் நம் தாஸநான வஸவணனாயக்கத்தில் திம்மப்பனாயக்கன் நமக்கு முன்னாள் நித்திய நைவேத்திய

2. திருவாராதனைக்கு கொடுத்த கிராமங்களாவன மதுரை மண்டலச்சீர்மையில் கலவேழ்விநாட்டு நாலுகோட்டைச் சீர்மையில் திருவுடையாட்டமாக நமக்குக் கொடுத்தமான குழி கிராமங்களும் இதுக்கு உள்பட்ட நான்கெல்லைக்கு உள்பட்ட ஏந்தல்களும் உள்ளிட்ட நஞ்சை புஞ்சை நத்தம் படுகை மாவடை மரவடை குடிக்கடமை மகற்வைக்காணிக்கை தறிக்கடமை பள்வரிப்பாசிவிலை மற்றும் நாளது வரையும் நடந்து வருகிற ஸமப்தப்ராப்தியும் உள்பட பொன்முதல் கலிபொன் முப்பத்தாறும் நெல்முதல் எட்டுப்படிக் காலால் நெல்லு நானூற்றைப் பதின்கலத்துக்கு நித்தியநைவேத்தியத்துக்கு காலஸந்தியில் தத்யோதந அவஸரத்தின்மேல் இவனிட உபயமாக கட்டளை இட்ட நாள்

3. ஒன்றுக்கு தத்யோதந அவஸரத்துக்கு மேல் இரண்டாம் அவஸரத்துக்கு இவன் பேரால் அவஸரமாக ஆறுமரக்கால் அமுதுபடிக்கு கலனே முக்குறுணி நெல்லாகவும் இந்த ஆறுமரக்கால் அமுதுபடி நைவேத்திய கட்டளைக்கு கறியமுது நெய்அமுது ஸமபாரம் தையிர்அமுது எரிகரும்பு திருப்பனாஞ்சனம் பாப்பார்கூலி மற்றும் எப்பேர்பட்ட சிலவும் உள்பட இந்த அவஸரம் ஒன்றுக்கு னாள்ஒன்றுக்கு ஒன்று ஆகவும் இந்தப்படியில் வருஷம் ஒன்றுக்கு நெல்லு னானூற்று அன்பதின் கலமும் பொன் முப்பத்தாறும் இந்தப்படி கட்டளைஇட்டு திருவுடைஆட்டமாக இந்த கிராமங்கள் விட்டபடியினாலே இவனாளும் கட்டளை இட்டுக்குடுத்துவிட்டவன் விழுக்காடு தன் சிலவுக்கு நம்

4. கலச்சோற்றில் நாள் ஒன்றில் இவன் அவஸரம் தூணிபதக்கு அமுதுபடிச் சோற்றில் இவன்தன்சிலவுனாலில்

ஒன்றுக்கு னாள் ஒன்றுக்கு அமுதுபடி குறுணிநாழி தோறும் நம்பதியில் மாடைதிருவீதியில் மனையும் னாம் இந்த திவஸத்தில் உனக்கு கட்டளை இட்டு தந்தபடியினாலே ஆசந்தரார்க்கஸதாயி ஆக புத்திர பௌத்திர பாரம்பரியக தாநாதி விநியோக விக்ரையங்களுக்கு யோக்கியமாக அனுபவித்துக் கொள்ளவும் இப்படிக்கு

திருவாய்மொழிந்தருளின படிக்கு திருமந்திரஒலைனாயகம் காளமேகபிரியன் எதிராஜதாஸாந் எழுத்து உ சுமமஸ்து.

*9. முதல் திருச்சுற்றுமதில் தென்பக்கம் வெளிபுறச்சுவரில் உள்ளது :*

1) க்கு நாச்சியார் பகவதியாழ்வார் ......

2) ணடெ முக்காலேமூன்று மா அம்பது ......

3) செய்வித்தகுலசேகரன் திருனந்தவன ......

4) தரச்சொன்னோம் இப்படி சந்திராதித்த .....

*10. வெளித்திருச்சுற்றுசுவர் கிழக்குக்கோடியில் உள்ள கல்வெட்டு :*

1) சகாப்தம் 1622 ன்மேல் விக்கிறம

2) தளவாய் நரசப்பய்யன் அவர்கள் அனுமதியினாலே

3) நரசப்பய்யன் குமாரர் வேங்கப்பய்யனவர்கள்

4) கட்டிவித்த திருப்பணி பழனியப்பன் சதாசேவை



அருள்மிகு யோகநரசிங்கப் பெருமாள் - நரசிங்கவல்லி தாயார், யா-நரசிங்கம் - 625 107

யாம் இருக்கும் இடத்தில் அஷ்ட ஐஸ்வர்யங்களும் பெருகும்